பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஆகஸ்ட் 2019



## பெண்ணின் பெருந்தகையும் மண்ணின் விருதுகளும்

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை
# தமிழ்நெஞ்சம் ®

தோற்றம் 1972 ஆகஸ்ட் 2019

*ஆசிரியர் / வெளியிடுபவர் :*
**அமின் மொஹமெட்**
*இணையாசிரியர் :*
**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**
*நிர்வாக ஆசிரியர் :*
**சஃபி மொஹமெட்**
*ஆசிரியர் குழு :*
**ஹிப்ஸீர் ரஹ்மான்**
**நெல்லை உலகம்மாள்**
**கவிஞர் தென்றல் கவி**
**கவிஞர் அ.முத்துசாமி**
**கவிஞர் ஈழபாரதி**
**கவிஞர் பாலமுனை பாறூக்**
*ஆலோசகர்கள் :*
**பாட்டரசர் கி. பாரதிதாசன்**
**கவிதாயினி சக்தி ஜோதி**

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனம் செய்திட, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.




பிரான்ஸில் 21.072019 அன்று நடைபெற்ற தமிழ்நெஞ்சம் பதிப்பான ஈழபாரதியின் சருகுகள் நூல் வெளியீட்டு விழாவில் பிரைன் கலைநதி நாட்டியாலையாவின் பரத ஆசிரியர் ரோஸ்லின் டயஸ் அவர்களின் நடன பள்ளி மாணவர்களின் நடனம். தொடர்ச்சி 40 ம் பக்கம்.

ஒரு சிறு தவறால்,
நல்லதும்கூட தவறாகவே
பார்க்க படுகின்றன...!!!
கோணங்கள்...!!!

- ச. இராஜ்குமார்

# ஊனம்

## ஐ. கிருத்திகா

"கல்கியோட அலையோசை கிடைச்சா வாங்கிட்டு வாங்க சார்..."

ரெங்கா வந்து நூறு ரூபாய்த்தாளை கொடுத்தான். கிளம்பும் அவசரத்திலிருந்த சிவராமன் அதை வாங்கி வைத்துகொண்டு தலையாட்ட,

''கல்கியோட எல்லா நூல்களையும் படிச்சிட்டேன், இந்த அலையோசையை தவிர. அலையோசை அருமையான நாவல்னு கேள்விப்பட்டிருக்கேன். படிக்கணும்னு ரொம்ப நாளா ஆசை'' என்ற ரெங்கா,

"இருவத்தஞ்சு கடைக்குமேல போட்டிருக்கானாம். ஏதாவது ஒரு கடையில புத்தகம் நிச்சயம் கிடைக்கும்'' என்று கூறிவிட்டு கட்டைகள் ஊன்றி நகர்ந்து போனான்.

சிறுவயதில் போலியோ வந்து இரண்டு கால்களும் பாதிக்கப்பட்டபிறகு கட்டைகளையே கால்களாக பாவித்து நடந்துவரும் ரெங்கா சரியான புத்தகப்புழு.

பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து ஒரு கேள்வி கேட்டால் பட்டென்று பதில் சொல்லுவான். அவனுக்கு அசோக மித்திரனும், கி.ராஜநாராயணனும் அத்துப்படி.

சொந்தமாக ஒரு பெட்டிக்கடை வைத்து நடத்தி வருபவன் அதில் வரும் வருமானத்தில் முக்கால்வாசி புத்தகங்கள் வாங்குவதற்கே செலவு செய்வான்.

''வீடு நெறைய புத்தகங்களை அடுக்கி வச்சிருக்கான். புத்தகம் வாங்குற காசை சேர்த்து வச்சா இல்லாத நேரத்துக்கு உதவும். சொன்னா கேட்கமாட்டேங்கிறான்" என்று அவனுடைய அம்மா புலம்பும்போது ரெங்கா,

''ஒருநல்ல புத்தகம் திறக்கப்பட்டால் சிறைச்சாலையின் கதவு மூடப்படும்" என்று சொல்லி சிரிப்பான்.

''நீங்கதான் எம்புள்ளைக்கு எடுத்து சொல்லணும்" என்று அந்தம்மாள் சொல்லும் போது சிவராமனால் எதுவும் சொல்ல முடிந்ததில்லை. ஒரு காலத்தில் அவனும் புத்தகப் பிரியனாக இருந்தவன்தான்.

ரெங்காவைப்போல அவனும் சுவாசிப்பதற்கு பதிலாக வாசித்து நாட்களை நகர்த்தியிருக்கிறான். திருமணம், குழந்தை, குட்டி என்றானபிறகு வாசிப்பில் நாட்டம் குறைந்து போனது. குடும்ப

பிரச்சனைகளை கவனிப்பதற்கே நேரம் சரியாக இருந்தது.

மளிகை, பால், ரேஷன், கரண்ட் பில், ஸ்கூல் பீஸ் என்று வாங்குகின்ற சம்பளம் மொத்தமும் பல கூறுகளாக பிரிந்துபோக, புத்தகம் வாங்குவதற்கென்று ஐந்து பைசாகூட மிஞ்சவில்லை. அதனாலேயே சிவராமனுக்கு வாசித்தல் மீது அக்கறை இல்லாது போய்விட்டது.

இருந்தாலும் ஒரு அலமாரி நிறைய புத்தகங்களை அடுக்கி வைத்திருக்கிறான். ஒருகாலத்தில் அவனும் ஒரு படிப்பாளி என்பதற்கான ஞாபகத்தின் மிச்சங்கள் அவை. அதிலிருந்து ஏதாவது ஒரு புத்தகத்தை எப்போதாவது எடுத்து புரட்டி பார்ப்பான்.




ஏற்கனவே படித்த புத்தகங்கள்தாம். இருந்தாலும் பக்கங்களை புரட்டும்போது மனத்தில் பழைய நினைவுகள் ஞாபக அலைகளாக புரளும். சிவராமனிடம் ஒரு பழக்கமுண்டு. புத்தகங்களை இரவல் தரவே மாட்டான்.

‘‘நீங்கதான் இதையெல்லாம் படிக்கறதேயில்லையே. பேசாம எல்லாத்தையும் பழைய பேப்பர்காரன்கிட்ட போட்டுடவா...?’’

புத்தகங்கள் வெறும் காகிதங்களின் கோர்வையே என்ற எண்ணம் கொண்ட மாலா கேட்டபோது சிவராமன் பற்களை கடித்தான்.

‘‘ஞான சூன்யம். அதுல கையை வச்சே கொன்னுடுவேன். அதெல்லாம் என் சொத்து. புதுசா வாங்கித்தான் படிக்க முடியலை. வாங்கினதையாவது ஒழுங்கா வச்சிப்போமேன்னு பத்திரப்படுத்தி வச்சிருக்கேன். நீ ஒண்ணு கிடக்க ஒண்ணு பண்ணிடாதே’’ என்று கத்த, தூசு தட்டுவதற்காககூட புத்தகங்களை தொடாத மாலா எரிச்சலோடு நகர்ந்தாள்.

‘‘லைப்ரரியில மு.வவோட கரித்துண்டு இல்லையாம். அது தெரியாம தேடித்தேடி அலுத்துட்டேன்’’என்று ரெங்கா ஒருநாள் சொன்னபோது சிவராமன் வாயை திறக்கவில்லை.

“கரித்துண்டு எங்கிட்ட இருக்கு.எடுத்துட்டு போய் படிச்சிட்டு தாயேன்” என்று சொல்ல அவனுக்கு மனம் வரவில்லை. புத்தகத்தை வீணாக்கிவிடுவானோ என்ற பயம்.

“நம்ம ஊர் திடல்ல எக்ஸிபிஷன் நடக்குது. ஞாயித்துக்கெழமை பையனை கூட்டிட்டு போகலாம்ங்க..’’ என்று மாலா நச்சரிக்க,சிவராமன் வேறுவழியின்றி சரியென்றான்.

மாதக்கடைசி. கையில் ஐந்நூறு ரூபாய் தான் இருந்தது. ஆனால் எக்ஸிபிஷனை பார்த்தபோது பத்தாயிரம் கொண்டு வந்தாலும் கையை கடிக்கும் என்று தோன்றியது.

ஒருபக்கம் பிளாஸ்டிக், எவர்சில்வர் பாத்திரக் கடைகள், இன்னொரு பக்கம் குழந்தைகளை கவரும் ஜெயின்ட் வீல், ட்ரெயின் வகையறாக்கள். திடலின் தென்கோடி மூலையில் வரிசையாக புத்தகக்கடைகள். சிவராமன் அதை நோக்கி செல்ல எத்தனிக்க, மகன் தடுத்து நிறுத்தினான்.

‘‘ராட்டினம் சுத்தணும்ப்பா..’’

“புத்தகம் வாங்கிட்டு வந்து சுத்தலாம்.”

“என்னங்க நீங்க, புத்தகக்கடை எங்கே போயிடப்போவுது. மொதல்ல டிக்கெட் வாங்கி பையனை ராட்டினத்துல ஏத்தி விடுங்க” என்று மாலா நச்சரிக்க, சிவராமன் டிக்கெட் கவுன்டரை நோக்கி போனான்.

டிக்கெட் விலையை கேட்டபோது மயக்கம் வந்தது. அதற்காக வாங்காமல் வந்தால் மகன் விடுவானா... அவனை சமாளித்தாலும் மாலாவை சமாளிக்க முடியாதே. சிவராமன் அரை மனதோடு டிக்கெட் வாங்கி கொண்டு வந்தான்.

“ஒரு டிக்கெட் நூறு ரூபாயாம் மாலா...”

“அவ்ளோதானா...”

மாலா எந்த பாதிப்புமில்லாமல் கேட்டாள். சிவராமன் முகத்தில் ஈயாடவில்லை. மகன் ராட்டினத்தில் கையாட்டி கும்மாளமிட்டதை அவனால் ரசிக்கமுடியவில்லை.

அடுத்ததாக மிளகாய் பஜ்ஜி கடை, அதையொட்டி ஐஸ்க்ரீம் கடை. அதையெல்லாம் தாண்டி வந்தபோது ஐந்நூறு, நூற்றியைம்பதாகியிருந்தது.

பஞ்சுமிட்டாயோடு வந்துவிடலாம் என்று எண்ணி வந்தவன் மலைத்து போனான். அடுத்தது மாலாவின் முறை. மாலா எவர்சில்வர் பாத்திரக்கடையை முற்றுகையிட்டாள். எதுவும் திருப்தியாக இல்லையோ என்னவோ, உதட்டை பிதுக்கியபடி வெளியே வந்த வள் புடவைக்கடையை பார்த்ததும் பிரகாச மானாள்.

“ஐந்நூறு ரூபா புடவை எரநூத்து அம்பதுதான். அருமையான புடவைங்க. பாதிக்கு பாதி விலைதான். வாங்க, வந்து புடிச்சதை எடுத்துகிட்டு போங்க...”

கடைவாசலில் நின்றிருந்தவன் இவளைப் பார்த்ததும் சற்று சத்தமாகவே குரல் கொடுத்தான்.

“என்னங்க, அந்தப்புடவை நல்லாயிருக்குல்ல...”

வாசலில் வரிசையாக தொங்கிக் கொண்டிருந்த புடவையில் ஒன்றை காட்டினாள். சிவராமன் அவளை முறைத்தான்.

“கையில நூத்தம்பதுக்குமேல ஒத்த

# மனப் பெயர்வு



வாடகை வீட்டில்
வாழ்க்கையைக் கடத்தியது
போதுமென
அடுக்ககத்தின்
புது மனையில் நுழையும்
ஆயத்தப் பணியில்
அனைத்தும் எடுத்து வைத்தாயிற்று

ஏதேனும்
மறந்துவிட்டோமா என
ஒவ்வோர் இடமாய்
கண்களால் துழாவும் வேளை

வாங்கியதில் இருந்து
பூக்காமல்
ஏங்கவைத்த
அந்தச் சாமந்திப் பூச்செடி
அன்றுதான்
மொட்டு விட்டிருந்தது

- கு.அ.தமிழ்மொழி

# மேன்மை

தொலைவில் வைத்தாலும்
வளர்ந்தப்பின்
தொட்டுபேசுவது
மரங்களின் குணம்

கூடவே வளர்ந்தாலும்
வளர்ந்தப்பின்
தொலைவில் போய்விடுவது
மனிதர்களின் குணம்

**மோகன் ராஜ்**

---

பைசா இல்ல, தெரிஞ்சிக்க...''

"ஆமா.எப்பப்பார்த்தாலும்பஞ்சப்பாட்டு தான். நான் கேட்டு ஒரு ஹேர்பின்கூட நீங்க வாங்கி கொடுத்ததில்ல."

''நான் வாங்கித்தராம பக்கத்து வீட்டுக்காரனா வாங்கித் தர்றான்.''

சிவராமன் கோபத்தில் பற்களை கடித்தான். கிட்டதட்ட ஐந்து நிமிட விவாதத்துக்கு பிறகு மாலா ஜெயித்தாள்.

ரெங்கா கொடுத்த நூறு ரூபாயும் புடவைக்கடைக்காரன் கைக்கு போனது. ரெங்கா வந்து புத்தகத்தை கேட்டால் என்ன செய்வது என்று சிவராமனுக்கு யோசனையாக இருந்தது.

'புத்தகம் கிடைக்கவில்லை என்று சொல்லிவிடலாம். ஆனால் அவன் கொடுத்த பணத்தை திருப்பி தந்தாக வேண்டுமே. பணத்திற்கு எங்கே போவது. ஒன்றாம் தேதி வர இன்னும் சில நாட்கள் உள்ளதே..'.

தவித்த சிவராமனுக்கு சட்டென்று அந்த ஐடியா வந்தது. அவசரமாய் போய் அலமாரியைத் திறந்தான். வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களில் நான்காவது வரிசையில் அலையோசை தென்பட்டது.

கடைசியாக சிவராமன் வாங்கிய புத்தகம் அது. சிவராமன் அதை மெல்ல எடுத்தான். வாங்கி சில வருடங்கள் ஆகியிருந்தபோதும் புத்தகம் புதுசு போல் பளிச்சென்றிருந்தது.

ரெங்காவுக்கு புத்தகத்தை பார்த்த தும் முகத்தில் தவுசண்ட் வாட் பிரகாசம்.

நன்றி சொல்லி வாங்கிகொண்டான்.

மறுநாள் அலுவலகம் முடிந்து வந்த வனை ரெங்கா வழிமறித்தான்.

"என்ன ரெங்கா...?" என்ற சிவராமனுக்கு உள்ளூர பதைபதைப்பு. ரெங்கா அந்த பத்து ரூபாய்த்தாளை அவனிடம் நீட்டினான்.

"புத்தகத்துல இந்த பத்து ரூபா இருந்துச்சு. நேத்து தவறுதலா வச்சிட்டீங்க போல."

"பத்து ரூபாய்தானே. அதுக்காக கடையை விட்டுட்டு வந்தியா....?'' சிவராமன் சிரித்தபடி கேட்டான்.

''பத்து ரூபாதானேன்னு ஈஸியா சொல்லாதீங்க சார். அஞ்சு பைசா காணாபோனாக்கூட என்னால தாங்கிக்க முடியாது. அதேமாதிரி அடுத்த வங்களோட பணம் ஒத்த பைசாவா இருந்தாலும் எங்கிட்ட இருந்தா எனக்கு தூக்கமே வராது''என்றவன்,

''அருமையான நாவல் சார். கீழே வைக்க மனசே வரலை. ஒரேநாள்ல முடிச்சிட்டேன். நூறு ரூபா கொடுத்தாலும் நல்ல மதிப்பு சார்...''என்று கூறிவிட்டு கட்டையூன்றி நடந்து போனான்.

சிவராமன் கையிலிருந்த ரூபாயை வெறித்து பார்த்தான். மனம் ஊனப்பட்டு போயிருந்தது. ■

# பாரியன்பன் - கவிதைகள்



■
விழி கொண்டு
மலரும் காதல்
மொழி கொண்டு
நகரும் கவிதை.

■
மறந்திடாமல்
சொல்ல நினைத்த
கவிதையொன்று
தொலைந்து போனது.

■
இமைகளின்
அனுமதியின்றி
உறக்கம் தழுவுவதில்லை
விழிகளை.

■
கிளையைப் பிரிந்த சருகு
சில கணங்கள்
நீந்திப் பழகுகிறது
காற்றில்.

■
வீட்டில்
வளர்ப்பு நாய்
எச்சிலிலையில் ஏதுமில்லை
பாவம் தெருநாய்.

■
நிறைவுற்றது பயணம்
வழக்கம் போல்
வீதியில் விட்டுவிட்டாய்
பிரியமின்றி தவிக்கிறேன்.

■
இருட்டிலிருக்கிறேன்
உற்றுப்பார்
நிழலாய் தெரியலாம்
நான்.

■
சுடரேற்ற
பயம் போயிருக்கும்.
அறையினுள் தனியாய்
தவிக்கும் இருட்டுக்கு.

■
சிறிது நேரத்தில்
அவளின் வருகை.
அப்போது நான் அவளாக
அவள் நானாவேன்.


■
நிரம்பி விட்டாய்
இன்னும் ஊற்றாதே!
வழிய வழிய
மண் தின்னும் உன்னை.

■
உன் நினைவுகளைத் தவிர
உன்னுடையதென்று
ஏதுமில்லை
என்னிடத்தில்...!

■
அகலில்
நெய்யாய் இருக்கிறேன்
திரியாக வா
காதல் சுடராகி ஒளிர்வோம்.

■
கெட்டும்
நெத்தும்
வேண்டாம்
உற்றார் வீடு.

■
நீ ஏறுகிறாய்
நான் இறங்குகிறேன்.
இருவரும் சந்திக்குமிடம்
சமதளம்.



# சங்க இலக்கியமும் தற்காலமும்

## முல்லைத்திணையும் முடிவுறாக் காத்திருப்பும்..

முல்லைக்குரிய உரிப்பொருள் “இருத்தலும் இருத்தல் நிமித்தமுமாகும்”(தொல்காப்பியம்,இளம்.,ப.30)வினைமேற்சென்ற தலைவன் வினைகளத்தே இருப்பதும் அவனுக்காகத் தலைவி காத்திருப்பதும்..

‘நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு
புலம்பொடு நீலுநினைந்து
தேற்றியு மோடுவளை திருத்தியு
மையல் கொண்டு மொய்யென
வுயிர்த்து மேவுறு மஞ்ஞையி
னடுங்டகி யிழைநெகிழ்ந்து.

(முல்லைப்பாட்டு..)

அன்றும் இன்றும் என்றும்..காத்திருப்பு கடினமானதே..

போரின்பொருட்டோ...பொருளின்பொருட்டோதலைவன் பிரிந்து செல்ல அவனை நினைத்துக் காத்திருக்கும் தலைவிக்கும்.. இன்றும் குடும்ப சூழல் காரணமாக அயல்நாட்டுக்குப் பணி நிமித்தம் சென்று விடும் கணவனை.. அவன் இருந்த காலத்தை நினைத்து வரும்பொழுதை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மனைவிக்கும் வேறுபாடு ஒன்றுமில்லை...

கணினியோ... தொலைபேசியோ... கைபேசியோ.. இணையமோ இல்லாத அந்நாளில் தன் உறவுகளோடு கூடியிருந்தபடி கார்காலம் வருமுன் வருவேன் என்றவனின் வாக்கை நம்பிக் காத்திருந்த முல்லை..

அருங்கடி மூதூர் மருங்கில் போகி,
யாழ் இசை இன வண்டு ஆர்ப்ப,
நெல்லொடு நாழி கொண்ட நறு வீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய்க் கைதொழுது,
பெரு முது பெண்டிர் விரிச்சி நிற்பச், (7-11)

(முல்லைப்பாட்டு)

அரிய காவலுடைய பழைய ஊர் அருகில் போய், யாழ் இசையைப் போன்று வண்டுகள் ஆரவாரிக்க, நாழியில்

நெல்லுடன் கொண்ட நறுமணமான மலர்களையுடைய முல்லைக் கொடியின் அரும்புகளில் புதிதாக மலரும் பூக்களைச் சிதறி, கடவுளைக் கையாலே தொழுது, வயதில் முதிர்ந்த பெண்கள் நற்சொல்லுக்காகக் காத்து நின்றனர்.

இன்றோ கட்புலனம் மூலமாக உரையாடி கைபேசி கொண்டு வரும்நாளை உறுதி செய்து உறக்கமின்றி காத்திருக்கும் கிள்ளைகளும் அவளும்.. ஒவ்வொரு நாளும் விடுப்பு கிடைக்குமா? பயணச்சீட்டு உறுதியாகுமா? விமானப் பயணம் தடையின்றி இருக்குமா? தவித்து நிற்கும் பெண்ணின் உணர்வுகளுக்கு சங்ககாலமோ தற்காலமோ எதுவும் இல்லை..

வெட்டிய மரத்தில்
கெட்டியாக உள்ளது
உனது பெயரும்
எனது பெயரும்

**- தட்சணாமூர்த்தி**

நகரத்துக்கு வந்தபின்பு
புத்திக்கு எட்டுகிறது,
நாட்டுப் புறத்தானாய்
இருந்திருக்கலாம் என்று!

**- க.பன்னீர் செல்வம்**

பரிதவித்து நிற்கும் நெஞ்சுக்கு பல்லியின் சொல்லோ...காக்கையின் கரைதலோ... பொய்யாக இருப்பினும் ஒரு நற்சொல் கடைத்தேற்றிவிடாதா என்ற நப்பாசை.. இது இன்று நேற்றல்ல..சங்க காலத்திலிருந்து தொடரும் ஒன்றோ?

திண்தேர் நள்ளி கானத்து அண்டர்
பல்ஆ பயந்த நெய்யின் தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
எழுகலத்து ஏந்தினும் சிறிது – என்தோழி
பெருந்தோள் நெகிழ்ந்த செல்லற்கு விருந்து
வரக் கரைந்த காக்கையது பலியே.

(குறுந்தொகை 210 காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்)

வெண்ணெல் சோறு பாலும் நெய்யும் கலந்து ஏழுகலத்தில் வைத்துக் காக்கையைக் கரையச் சொல்லும் மனநிலை என்றும் தொடருகிறவொன்று பிரிந்தவர்களுக்கு..

பிரிவு எத்தகையத் துயரைத் தருகிறது..கார்காலத்தில் பூத்துக் குலுங்கும் முல்லை மலர்களும்..தன் இணையைச் சேரும் ஆநிரைகளும் ஒருபுறம்.. தலைவன் சென்ற வழி எப்படிப்பட்டதோ அவன் நலமாக சென்றானோ...எனத்தவித்து தன்னையே ஆற்றுப்படுத்திக் கொள்ளும் தலைவி..

நன்றே காதலர் சென்ற ஆறே
அணிநிற இரும்பொறை மீமிசை
மணிநிற உருவின தோகையும் உடைத்தே. 431

(ஐங்குறுநூறு...பேயனார்)

இன்றும் பனியிலும் வெயிலிலும் தன் தாய்த்திருநாட்டைக் காக்க எல்லையில் வீரத்தோடு நிற்கும் ராணுவ வீரர்களின் மனைவிமார்கள் அவர்களை விடையனுப்பும் போது மன வலிமையோடும் திண்ணிய நெஞ்சோடும் தன்னைத் தானே ஆற்றுப்படுத்திக் கொண்டே அனுப்பி வைக்கிறார்கள்..

காத்திருப்பும் கவலையும் பெண்களுக்கு மட்டும் தானா? வினை முடித்து இருப்பிடம் வர விரும்பும் தலைவனின் உள்ளம் அவன் வருமுன் அவளை ஓடோடி அடைந்திடாதோ? காற்றினும் கடுகிச் செலுத்த சொல்லும் தேர்ப்பாகனிடம்..

அம் தீம் கிளவி தான் தர எம் வயின்
வந்தன்று மாதோ காரே ஆவயின்,
ஆய்த்தொடி அரும் படர் தீர,
ஆய் மணி நெடுந்தேர் கடவுமதி விரைந்தே.

(ஐங்குறுநூறு பேயனார் )

காத்திருக்கும் காதல் மனைவியின் கவின்முகம் நெஞ்சிலே நிறைந்திருக்க கணமும் தாமதியாது அவளைக் காண விழையும் அவனுள்ளம் ஆகாயவூர்தியை அரைநொடிக்குள் செலுத்த சொல்லும்..

காதலும் வீரமும் அறமும் உயிர்நாடியாய்க் கொண்ட சங்க இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் மனித உணர்வுகளின் உன்னதக் குவியல்.. யுகங்களானாலும் மரித்துப் போகாத மானுடத்தின் நேசத்தை அடிநாதமாய் ஊடாடும் உண்மை அன்பினை உரக்கச் சொல்லி உணரவைக்கும் கலைப்பெட்டகம்..

தமிழ் இலக்கியத்தில் சங்ககாலம் பொற்காலம் என்ற கருத்தில் எள்ளளவும் கூடுதல் இல்லை ..

சங்க இலக்கியம் சாதாரண மானுடர்களின் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டிய கண்ணாடி..

**மதுரா**
தஞ்சாவூர்

---

# நேசம்

ஒரு விகற்ப இன்னிசை சிந்தியல் வெண்பா

1.
தேங்கும் நடையினைத் தேக்கி நிறுத்தியே
வாங்கும் நினைவுடன் வந்தேன் அவளது
தாங்கும் கொடியிடை தாங்கு.

2.
கூசும் ஒளியால் குமுத மலரெனப்
பேசும் கிளியவள் பேசிடா நிற்கவே
தூசாய் உறுத்திய தூது.

3.
கண்ணின் மொழியினில் காந்தமே நீட்டிட
புண்ணாய்ப் புகைந்து புலம்பல் மிகுந்திட
எண்ணம் சிதைந்திட ஏங்கு.

**- கு. கமலசரஸ்வதி**

# மாற்றி யோசி

அன்று மதியம் ரூமுடைய கதவை திறந்த போது சாவி கைதவறி கீழே விழுந்து விட்டது. சாவியை எடுக்க குனிந்த போதுதான் அது கண்ணில் தெரிந்தது. எறும்புகளின் ஒரு பெரும் படையே கதவின் ஓரத்தில் இருந்த இடுக்கு வழியாக போய்க்கொண்டு இருந்தது.

அவசர அவசரமாக கதவை திறந்து பார்த்த போது அதன் ஓடுபாதை மேற்புறமுள்ள சுவற்றை நோக்கி இருந்தது. நான் மெதுவாக சுவரோரம் கிடந்த பிளாஸ்டிக் பையை எடுத்து விட்டு பார்த்தேன். எறும்புகளின் பாதை சுவரிலிருந்து வடபக்கமாக திரும்பி கட்டிலுக்கு கீழாய் போனது.

''எறும்புப் பொடியை எடுத்து தூவி விட்டால்தான் சரியாக வரும்..'' என்று எண்ணியவாறே எறும்புகளின் ஊர்வலத்தை பின் தொடர்ந்தேன். கண்கள் எறும்பு பொடி இருக்கும் இடத்தை தேடின.

அதே நேரத்தில் ''எறும்பு பொடியை போட்டே தீரணுமா.. கொஞ்சம் மாற்றி யோசிக்கலாமே. பாரு எவ்ளோ எறும்புகள். அதுவும் கடிக்காத சிற்றெறும்புகள். எவ்வளவு அழகாக போகின்றன. இத்தனையையும் கொல்லணுமா.'' என்று மனம் ஆலோசனை சொன்னது.

''முதலில் அது எந்த அளவு சாத்தியம் என்று பார்க்கலாம். ''

எறும்புகள் எதன் மீதும் பட்டுவிடாமல் கால்களை கவனமாக எடுத்து வைத்து எறும்பூர்வலத்தை தொடர்ந்தேன். இப்போது அதன் திசை கிழக்கு நோக்கி திரும்பி இருந்தது.

தண்ணீர் குடம் இருந்த இடத்திற்கு பக்கத்தில் என்னவோ கிடந்தது. சகல எறும்புகளும் அங்கே சங்கமித்து இருந்தன. கிட்டே குனிந்து பார்த்தேன். ஏதோ ஒரு துண்டு உணவுப் பொருள் கீழே கிடந்தது. அதை மெதுவாக தொட்டேன். உடனேயே எல்லா எறும்புகளும் பரபரப்பாக விலகி ஓடவே அந்த உணவுத் துண்டை எடுத்து கதவுக்கு வெளியில் வீசினேன்.

பிறகு கதவை திறந்து வைத்துக் கொண்டு ஒரு ஐந்து நிமிடம் பாப்போம்.. என மாற்றி யோசித்தேன். காத்திருந்தேன். ரெண்டு நிமிடம் கூட ஆகவில்லை.. எல்லா எறும்புகளும் ' ரிவேர்ஸ் - ல போன அழகப் பார்க்கணுமே. அடா அடா அடா. ரசிக்கத் தெரிந்தவனுக்கு எல்லாமே அழகுதான்.

'' எத்தனைக் கோடி இன்பம் வைத்தாய் இறைவா.'' என்று பாடணும் போல் இருந்தது.

ரெண்டு நிமிசத்துல ஒரு எறும்பு கூட இல்லை. ரூமு சுத்தம்.

அப்போதுதான் புரிந்தது.

எதையும் ஒருமுறை சாதக பாதகங்களை நிதானமாக சிந்தித்து செய்தோம் என்றால்.. நம்மாலும் அற்புதங்கள் நிகழ்த்து விடத்தான் செய்யும் என்கிற மறுக்க முடியாத உண்மை.

**- இப்னு செய்யிது.**
கடையநல்லூர்



# பேரகமாட்டேன்

## சுமதி இளங்கோ

எல்லா பெற்றோருக்கும் தங்கள் பெண்ணை ஒரு நல்ல இடத்தில் கட்டி கொடுக்க வேண்டும் என்ற கனவு நியாயமான ஒன்றுதான்.. அவள் பெற்றோரும் அப்படித்தான்...மாப்பிள்ளைப் பார்க்க தொடங்கினர். படித்த மாப்பிளை, நல்ல வேலையில் கை நிறைய சம்பாதிக்கும் ஒருவன், நல்ல குடும்பம், இருவருக்கும் இருவரையும் பிடித்தும் போனது,

உடனே நிச்சயம் செய்துவிட்டனர், தினமும் அழை பேசியில் இருவரும் தங்களைப் பற்றி பேச தொடங்கினர். இருவருக்கும் ஏற தாழ ஒரே மனப்பான்மை தான். இருவருக்கும் பொருந்தி போனது. திருமண நாள் நெருங்க நெருங்க வீட்டில் ஒரே பதட்டம். வேலைகள் தலைக்கு மேல் கிடந்தது, இருவர் வீட்டிலும் வேலைகள் துரிதமாக நடந்தேறியது. நாளை திருமணம். அவள் லேசாக அவள் வீட்டை சுற்றிப் பார்த்தாள். தினமும் அவருடன் பேசியதில் தான் இந்த வீட்டை விட்டு செல்ல போகிறோம் என்று தெரியவில்லை.

ஆனால் அன்று ஏதோ ஒன்றை இழக்க போகிறோம் என்று அவள் மனம் பரிதவித்தது. தாயையும், தந்தையையும் பார்த்தாள். எல்லோரும் வேலையில் இருந்தனர். அவள் வீட்டை ஒரு முறை சுற்றி வந்தாள். விரித்த கண்களோடு வீட்டை பார்த்தாள். கண்கள் சுருங்கிய பின்னர் ஓரத்தில் நீர் துளி சொட்டியது.. தங்கையின் புது துணி பரவசத்தில் அக்கா என்று ஓடி வந்தாள்..

அவளை பார்த்ததும் என்ன ஆச்சு அக்கா என்றாள். பூ வாங்கினால் கூட சமமாய் வெட்ட சொல்லி சண்டை போடும் அக்கா, இனி நான் யாருடன் சண்டை போடுவேன்? இந்த சின்ன சின்ன மகிழ்ச்சிகளை விட்டுக் கொடுத்து விட்டு நான் செல்ல போகிறேனே என்று எண்ணினாள். அடுப்படியில் பால் கொதித்து கொண்டிருந்தது. ஓடி சென்று அடுப்பை அனைத்து அம்மா பால் வெச்சிட்டு எங்க போனே என்று திட்டினாள், அவளை பெற்றவள், அவளை வளர்த்தவள் என்றாலும், அம்மா வை அடிக்கடி திட்டி விடுவதும், பின் கட்டி அணைப்பதும் இனி கிடைக்குமா?

அப்பா யாருடனோ தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தார். அவர் பக்கத்தில் சென்று அமர்ந்தாள். பேசிக் கொண்டே அப்பா இவளைப் பார்த்தார். அம்மாவை கொஞ்சம் கூப்பிடுமா என்று சொல்லி விட்டு மறுபடியும் பேச தொடங்கினர். இவள் எச்சிலையும் சோகத்தையும் தொண்டையில் விழுங்கி விட்டு எழுந்து அம்மாவை அழைத்து விட்டு, வீட்டின் வெளியில் உள்ள மாடிப்படியில் உட்கார்ந்தாள்.

எங்கிருந்தோ, அடியே உள்ள போ, கருத்துர போற நாளைக்கு கல்யாணத்த வெச்சிக்கிட்டு இங்க வந்து உட்காரா பாரு என்று எப்பொழுதும் எதையாவது சொல்லி கொண்டிருக்கும் பாட்டி, எரிச்சலுடன் பாட்டியிடம் எப்பொழுதும் பேசும் அவள் அன்று பாட்டி சொன்னதை கேட்காமல் பாட்டியை முறைத்துப் பார்த்தாள். முகம் அப்படியே அழுவது போல மாறியது. பாட்டி உடனே என்னடி என்ன ஆச்சு என்று பதட்டத்துடன் கேட்டாள். அழுகை அருவிப் போல் பொங்கியது. உள்ளே ஓடி சென்று விரக்தியுடன் அம்மா அப்பா என்று கத்தினாள். எல்லோரும் ஏதோ என்று பயந்துக்கொண்டு ஓடி வந்தனர். உடனே, அம்மா நான் போகமாட்டேன். இங்கேயே இருந்துடுறேன். உங்களை விட்டு நான் எப்படி செல்வேன்? அங்க எப்டி இருக்குமோ? எனக்கு பயமா இருக்கு, நான் போகலை என்று மெல்லிதாய் அழுதாள். உடனே அப்பாவின் மனம் அழுதது. அம்மா சமாதனம் சொன்னாள். அப்பாவுடன் அவ்வளவு நெருக்கம் இல்லாமல் இருந்தாலும் அப்பாவிற்கும் பெண்ணிற்கும் உள்ள அந்த பாசம் வார்த்தையில் வருணிக்க முடியாதது. தங்கை குலுங்கி குலுங்கி அழுதாள். அக்கா அழாதே கா மாமா உன்ன நல்லா பார்த்துபாறு கா என்று வெகுளி பேச்சில் சமாதானம் செய்தாள்.

அன்றிரவு அவளுக்கு பிடித்த அத்தனையும் சமைத்தாள் அம்மா. ஆனால் அவள் புண்பட்டு போயிருந்தாள். நாளை திருமணம். போகும் இடம் சொர்க்கமோ, இல்லையோ என்றெல்லாம் தெரியாது. ஆனால் அவள் வாழ்ந்த ஒரு சொர்கத்தை விட்டு மட்டும் அவள் செல்ல போகிறாள். திருமணம் என்பது ஆண்களின் வாழ்வில் ஒரு நிகழ்வு. ஆனால் ஒவ்வொரு பெண்ணின் வாழ்விலும் அது மாற்றம்... அவள் வாழ்ந்த வீட்டிலிருந்து அவளை வேரோடு பிடிங்கு எடுத்து மற்றொரு இடத்தில் நட்டு வைக்கும் விழா தான் திருமணம். துளிர்ந்த பெண்களும் உள்ளனர். பட்டுப்போன பெண்களும் உள்ளனர்.

# இயற்கை அழகு !

முத்துக்களைக் கோர்த்துவந்து
முறுவலிக்கும் பற்களென்றாய்,
கெழுத்திமீனை எடுத்துவந்து
கண்களெனக் காட்டுகின்றாய்.


முந்திரிப்பழம் கொண்டுவந்து
மூக்கென்றே வாசிக்கிறாய்,
கோவைப்பழம் எடுத்துவந்து
கூறுகிறாய் இதழென்று.

கருமுகிலைத் தாங்கிவந்து
கருங்கூந்தல் தானென்றாய்,
சங்கினையே தருவித்துச்
சங்கீதக் கழுத்தென்றாய்.

செரியினையே பதித்துவிட்டு
செந்தூரக் கன்னமென்றாய்,
மல்கோவா மறுதலிக்க
மாம்பழமே முகமென்றாய்.

மட்டைப்பந்து மைதானம்
மங்கையுந்தன் நெற்றியென்றாய்,
மன்மதனின் வில்லாக
மணக்குமிந்த இமையுமென்றாய்.

**கவிஞர்.அ.முத்துசாமி,**
தாரமங்கலம்.



## நூல் மதிப்புரை

# முனைவர்.நா.நளினிதேவி

தமிழ்ப்பேராசிரியர் (ஒய்வு)


## நூல் : ‘இலங்கையில் சிங்களவர்’

(இந்திய இனத் தொடர்ச்சியும் தென்னிந்தியப் பண்பாட்டுத் தொடர்ச்சியும்)

ஆசிரியர் : பக்தவச்சல பாரதி

பதிப்பகம் : அடையாளம், திருச்சி.

இலங்கை அரசின் இனவெறிப் படுகொலைக்குத் துணை நிற்கும் நடுவணரசும் ஏன் தமிழக அரசும், உருசியா, சீனா போன்ற பொதுவுடைமை நாடுகளும், ஏனைய உலக நாடுகளும் வரலாற்றுப் பிழை செய்வதை இந்நூல் அரண் செய்கின்றது. தமிழர் யார்? சிங்களவர் யார்? இலங்கையின் வரலாறு என்ன என்பதையும், அறிவியல் முறையிலான மரபணுக்கூறு இயல், மானிட இயல், தொல்லியல் சார்ந்த மண்டைஓடு, எலும்புகள், கலங்கள் பற்றிய ஆய்வியல், நாணயவியல், நிலவியல், சமுதாய இயல், மொழியியல், வரலாற்றியல், இசை,ஆடல், நாடகஇயல், இறையியல், இலக்கண இலக்கியவியல், அசைவியக்கக் கூறுகள், தொன்மம், அய்தீகம் முதலியவற்றின் அடிப்படையில் இலங்கை உட்படப் பல்வேறு நாடுகளைச் சார்ந்த உலகளாவிய ஆய்வியல் கருத்துகளின் அடிப்படையில் ஆராய்ந்துள்ளது. முற்றிலும் மாறுபட்ட இவ்வணுகுமுறை வரலாற்றுக் கொடை என்பதில் மிகையில்லை.




இலங்கையின் தொல் வரலாறு கூறும் நூல்களாகக் கொள்ளப்படும். தீப வம்சம்’ (கிமு.4), மகாவம்சம்’ (கி.மு.6) புனைவுகளும், சமயச்சார்பும், இயற்கை இறந்த நிகழ்வுகளும் கொண்டவை என்பதைக் குறைந்த அளவு வரலாற்றறிவுடையோர் கூடப் புரிந்து கொள்ள முடியும். மேலும் குடியேற்ற வல்லாண்மை நாடுகள் தம் ஆட்சியை நிலை நிறுத்திக் கொள்ளும் நோக்கில் தமக்கு உரிய பிரித்தாளும் சூழ்ச்சி, இன அடிப்படையில் மக்களைப் பிரித்தல் போன்ற கூறுகளுடன் இலங்கை வரலாற்றை எழுதியுள்ளன. மகாவம்ச, தீபவம்ச அடிப்படையில் இலங்கை அறிஞர் எழுதியுள்ள (குணவிதாரண) வரலாறு அணுக்கருவி ஆய்வுகளைவிடவும்தவறானவரலாற்றியல், கடுமையான விளைவுகளையுடையது என்பதைஎடுத்துக்காட்டுகிறது. வேண்டுமென்றோ அல்லது சரியான புரிதல் இல்லையோ இலங்கைக்கு துணை

நிற்கும் ஒவ்வொரு நாடும் அறிந்து கொள்ள வேண்டியதன் இன்றியமையாத தேவையை இந்நூல் வலிமையாகவே உணர்த்தியுள்ளது.

இலங்கை வட இந்திய தோற்றமும் தென்னிந்தியப் பண்பாட்டு நீட்சியும் கொண்டது என்ற ஆய்வின் கருதுகோள் தக்க தரவுகளுடன் தெளிவாக்கப்பட்டுள்ளது. வட இந்தியா, தென் இந்தியா என்ற பாகுபாட்டைப் போலவே இலங்கையும் கரையோர நாடு, கண்டி நாடு என உயர்வு தாழ்வு மனப்பான்மை உணர்வுடன் கூடிய இரண்டு பிரிவுகளாக உள்ளது. இந்திய உறவுமுறை அமைப்பு, உறவுச் சொற்கள், அசைவியக்கக் கூறுகள், சிங்கள மொழியின் இலக்கிய இலக்கண அமைப்பு, இசை இலக்கணம், பொதுமக்கள் இலக்கியம், பத்தினிக் கடவுள் வழிபாடு, இலங்கைத் தொல்குடி வேடரும், சிங்களரும், இலங்கைத் தமிழரும் வணங்கும் கதிர்காம கடவுள், ஊர்ப்பெயர்கள், நாகசதுக்கம், கோயில் அமைப்பு முதலானவை தென்னிந்திய தமிழ் மொழியுடன் ஒத்து இருப்பதை நூல்விரிவாகவும் வெகு எளிய, நல்ல தமிழில் விரித்துரைப்பதைப் பாராட்டவேண்டும்.

இந்தியாவின் மேற்கு வங்கம், ஒடிசாப் பகுதியிலிருந்து குடியேறியவரே சிங்களவர் எனக் கூறப்படுகிறது. ஆழ்ந்து நோக்கும் போது, சிங்கள மரபணுக் கூறுகள் தென்னிந்திய மக்களுடன்தான் நெருங்கிய தொடர்பு இருப்பதாக அறியமுடிகிறது. தொடக்கத்தில் ஒத்த மரபணுக் கூறுகளைக் கொண்டிருந்த மக்கள் காலப் போக்கில் இரு வேறு இனக்குழுக்களாகப் பிரிந்து பின்னர்த் தனித்தனி இனமாகவும் சமூகமாகவும் மாறியுள்ளமை (அண்மைக் காலத்தில்)யை நூல் விரிவாகக் கூறுகின்றது. சிங்களச் சமுதாயஅமைப்பில்முதலிடம்பெறும்'கராவ', 'சலாம' இனத்தவர் தமிழகத்தில் இருந்து பல காரணங்களால் பல்வேறு காலங்களில் இலங்கைக்கு குடிபெயர்ந்தவரின் மரபினரே. புலப்பெயர்வுக்குப் பின் ஒரு மொழி, ஒரு சமயம்சார்ந்தவர்வேறொருமொழி,வேறொரு சமயத்தைத் தழுவும் போது நாளடைவில் இன்னோர் இனக்குழுவாக உருவாவர் எனும் வரலாற்று நிகழ்வுக்கு எடுத்துக்காட்டாகவே



முனைவர்.நா.நளினிதேவி

இலங்கையைக் கொள்ள வேண்டும் எனும் கருத்தியல் மறுக்க இயலாத சான்றுகளுடன் அரண் செய்யப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவிலிருந்து சென்ற தமிழர், மலையாளர், கன்னடர், துளுவினரும், தென்கிழக்காசியாவிலிருந்து புலம் பெயர்ந்த சாவகரும்காலப்போக்கில்சிங்களராகியுள்ளனர். பின்னர் இரண்டு தலையாய மொழி பேசும் குடும்பங்களாக மாறியுள்ளனர். சிங்களம் என்ற சொல் பல்வேறு மொழிபேசுவோரின் வழிவந்த குழுக்களை ஒன்றிணைத்து நிற்கும் சொல்லாகும். சிங்கள அறிஞராகிய ஏ.த.செல்வா இலங்கையில் குடியேறிய மக்களே தமக்குள் தடையின்றி கலந்து சிங்கள தேசிய இனத்தை உருவாக்கினர். எனவே சிங்களத்தில் வாழ்வோர் தம்மை ஒரு குடும்பத்தையோ, இனத்தையோ சார்ந்தவர் எனக் கூறல் கூடாது என்ற கூற்றை இந்திரபாலா போன்றோர் எடுத்துக் காட்டியுள்ளனர் என்பதை நூல் சுட்டிக் காட்டுகின்றது.

அசைவியக்கக் கூறாகிய அய்தீகம் எல்லா மரபிலும் காணப்படுவது போலவே சிங்கள மரபிலும் காணப்படுகிறது. பவுத்தம் சார்ந்த தீபவம்சம், மகாவம்சத்தில் பத்தினிக் கடவுள் வழிபாடு இடம்பெறவில்லை. இதனைச் சுட்டிக் காட்டும் நூல், இவ்வழக்கு பவுத்தத்திலிருந்து இந்து சமயத்திற்குச் சென்றது என்பதை மறுக்கின்றது. தமிழகத்து முருகக்கடவுள் வழிபாடு போன்று இலங்கைத்

தொல்குடி வேடர்களும், சிங்களரும், தமிழரும் வழிபடும் கதிர்காம வழிபாடு இருப்பதையும்நினைவிற் கொள்ளவேண்டும்.

நூலின் கருத்துகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துக் காணின், இந்தியாவில் தோன்றிய தொல் சமயமாகிய பவுத்தம் இலங்கையில்வேரூன்றியஉயிரிர்ப்புடன் இருக்கின்றது. இந்து சமயத்தை எதிர்த்துத் கடவுளைத் தம் வயமாக்கிக் கொண்டுள்ளது. சிங்களர், வட, தென்னிந்தியரோடும், இலங்கைத் தமிழரோடும் இன உறவு கொண்டவர். வரலாறு முழுவதும் ஒரு தனி நிலப்பகுதிகளில் வாழ்ந்துவருவதால் தமக்கென்று சில தனித்துவங்கள் கொண்டு சிறப்பாகப் போற்றுகின்றனர் என்பதே நூலின் முடிவாக அமைந்துள்ளது.

உலகின் முதல் அறிவாளர் இனம் எனப் பறை சாற்றிக் கொள்ளும் இன்றைய ஆட்சி - இந்திய ஆட்சியாளர் இந்த உண்மைகளை அறியாதவர் எனப் புரிந்து கொள்ள முடியாது, எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வகையில் சிங்கள அரசுக்கு இந்தியா துணை நிற்பது உள்ளங்கை நெல்லிக்கனி! உலக அறிஞர்கள் ஆய்ந்து எழுதிய வரலாற்று உண்மைகளே இவை என்ற வகையில் உலக நாடுகள் அறியாதிருக்கவும் வாய்ப்பில்லை. இயற்கை வளமுள்ள இலங்கையைத் தம் கட்டுக்குள் கையகப்படுத்தும் செயலே இது என்பது வெள்ளிடைமலை! இந்நூல் சிங்களமொழியில் வெளிவருமானால் சிங்கள வெறியர்களின் கண்களைத் திறக்கும்.

---



# நாளை நமதே

கூடுகின்றக் கார்மேகம் கொட்டிவிட மறக்குமெனில்
குவலயமே பாலைவன மாகும்
நாடுகின்ற மாமழையும் நமக்கின்றிப் போகுமெனில்
நற்பயிர்க்கு தானிங்கு சேதம்
தேடுகின்ற நிழல்பரப்பி தெருவோரம் நிற்கின்றத்
திடமா ன மரங்கூட வாடும்
ஓடுகின்ற நதிவற்றி ஊர்முழுதும் பசுமையின்றி
உரசுமுன்பு தீப்பிடிக்கக் கூடும்.

ஆடுவெட்டி மாடுவெட்டி அவசியமே இல்லாமல்
அத்தனையும் உண்ணுவது போலும்
காடுவெட்டிக் காசாக்கிக் கைக்குள்ளே போடுகின்றக்
காரியங்கள் விட்டாலே போதும்
பாடுபட்டு உழைப்பதற்குப் பாங்கான நிலைதோன்றி
பார்மீண்டும் பழையதுபோ லாகும்
நாடுகெட்டுச் சீரழியும் நாசங்கள் இல்லாத
நாளையிங்கு நமக்காகக் கூடும்

**- மெய்யன் நடராஜ்**

# ஒழுக்கம் விழுப்பம் தரலான்...

*இசைவாசி க.சிவராஜ்*



தமிழ்ச் சங்கம் தன்மானச் சிறப்புக்குரியது என்பது மிகைக்குச் சொல்வதில்லை. செங்கோல் ஆட்சி மன்னர் கொடைத் திறம், வீரம், போர் முறைகள், நீதிநெறிகள் போன்ற புற வாழ்வுகளும் சரி இல்லறம் களவு, கற்பு போன்ற அக வாழ்விலும் சரி தமிழின முன்னோர்கள் ஒழுக்கத்தை கடைப்பிடித்தார்கள் என்பதற்கு பல இலக்கிய சான்றுகள் காணலாகின்றன. “ஒழுக்கம் போல மக்கள் உயிர்க்கு பயத்தல் சிறப்பில ஆகலானனும், அவைதாம் நூலானே அன்றி உணர்வு மிகுதியானும், தேய இயற்கையானும் அறியப்படுதலானும், அவற்றை ஒழித்து, ஈண்டுத் தெய்வப் புலமைத் திருவள்ளுவரால் சிறப்புடைய ஒழுக்கமே அறம் என உடுத்துக் கொள்ளப்பட்டது” என்று பரிமேலழகர் உரை, வள்ளுவர் கூறுகின்ற ஒழுக்கத்தையே சிறந்த அறமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. என்கிறது. “இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்” என்ற கூற்றிற்கு இணங்க இழிந்த செயல்கள் வாழ்வியலின் சிறப்பை கெடுத்து விடும். ஒழுக்க செயல்களே மனிதனுடைய உயர்ந்த வாழ்க்கை எடுத்துச் சொல்லும். அதன் அடிப்படையில் வள்ளுவரின் அறவியலை ஆய்வுக் களமாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

பழி, வஞ்சகம், புறம், இழிவு, சினம், வெறுப்பு போன்றவைகள் நம் ம்தை பாழாக்கும் மாசுக்களாகும். நம் மனதை கருவலை என்றான் திருமூலர். “உள்ளம் பெருங்கோவில்” என்பது திருமூலரின் நம்பிக்கை ஆபரணமாக மாறும். கழிவுகள் வைரங்களாக மாறும், திங்கு என்கிற உஷ்ணத்தை எளிதாக தாங்கி மன உறுதியும், தெளிவும், கொண்டால் அதுவே இறை வாழும் இதயமாகிறது. மாசற்ற மனம் படைத்தவர்கள், தனக்கு தீங்கு செய்தவர்களுக்கு நன்மை நினைப்பார்கள் தீங்கை தாங்கி கொள்ளும் வலிமையும், நல்லதையே கடைபிடிக்கும் மனத் தெளிவும் கொண்டவர்கள் மனதில் மாசு இல்லாதவர்கள். நன்மைக்குக் கூலி நன்மை ஆகும். தீமைக்குக் கூலி தீமை ஆகும். என்பதை

“கருத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்”

இக்குறளில் மிகச் சிறந்த ஒழுக்க வாழ்வியலாக வள்ளுவர் பகர்கிறார். அது மட்டுமல்ல ஒருவன் மனம் அறிந்து நமக்கு தீமை செய்து விட்டதும் அதற்கு பதிலாக தீங்கு செய்ய கருதாத நல்ல மனம் படைத்தவர்கள் நல்ல கொள்கை கொண்டவராக இருப்பார்கள்.

நம்மை விட பலவீனமானவர் இடத்தில் கோபத்தை காட்டுதல் நியாயமானது இல்லை நம்மை விட வலிமையானவர்கள் இடத்தில் கோபத்தைக் காட்டினால் அது தீது ஆகும். ஏன்பதை "செல்லா இடத்துச் சினந்தீது" என்கிறான் வள்ளுவன்.

சரியான சொல்லைப் பேசவில்லை, எனில் அங்கு அறிவு வேலை செய்யவில்லை என்று அர்த்தம் சொல் மற்றவரை கவுக்கவும் செய்யும் ஒருவரை உயர்த்தவும் பயன்படும். பேசும் சொல் நம்மை அறியாமல் வந்து விட கூடாது. அவ்வாறு வந்து விட்டால் அந்தச் சொல்லுக்கான பிழையைத் திருத்திட முடியாது. நம்மை விட்டு போனவர்களைச் சரி கட்டி பார்க்கலாம். ஆனால் நம்மை விட்டு வந்த கடுமையான சொல்லை கூறுபடுத்திப் பார்ப்பது கடினம். சொல் நல்லவர்களை அறிமுகப்படுத்தி வைக்கிறது. சொற்களாலே இன்பம் எய்தலாம். சொற்களாலே வெற்றி பெறலாம். சொல் ஒழுக்கத்தின் வெளிப்பாடாகவும் இருக்கிறது.

"சொல்லுக சொல்லை பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுச்சொல் இன்மை அறிந்து".

உபகாரத்தை உதாசினப்படுத்தாமல் நன்றி உணர்வோடு வாழ்வதும் சிறந்த ஒழுக்கங்களில் ஒன்றாகும். அறிவியல் முறைப்படி உணவு பரிமாற்றம் சுழற்சி முறையில் நடைபெறும் என்கிறார்கள். ஒரு உயிர் இன்னொரு உயிரோடு தொடர்பு கொண்டு வாழ்கிறது. இது மனிதனுக்கும் பொருந்தும். அவனும் ஒரு உயிர்தான். ஏந்த ஒரு மனிதனும் இன்னொரு மனிதனை சார்ந்தே வாழ்கிறான் யார் எல்லாம் இருக்கையில் சார்ந்து அமர்கிறார்களோ அவர்கள் எல்லோரும் அடுத்தவரைச் சார்ந்தே வாழ்கிறார்கள். என்பது ஓர் உளவியல் உண்மை. தேவைக்காக மட்டுமே அடுத்தவரைச் சார்ந்திருப்பது என்பது இழிவு. தேவைகள் பூர்த்தியானும் பிரிந்து போகாமல் அவன் செய்த உதவிக்கு ஏற்ற பிரதி உபகாரம் செய்பவன் பைரவர் அவதாரம் போன்றவன். "நல்லோருக்கு செய்த உகபாரம் கல்மேல் எழுத்து போல் தோன்றும் என்று ஔவை நல்லோர்க்கு செய்யும் உபகாரத்தை அவர்கள் மறப்பதே இல்லை என்கிறாள். ஈரமில்லாத நெஞ்சம் கொண்டவர்களுக்கு செய்த உபகாரம் வீண் செயலாகி விடுகிறது.

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது"

பயன் கருதாமல் செய்யப்படும் உதவி இதயம் என்னும் பெரும் கடலினை விடவும் உயரியது என்கிறான் வள்ளுவன். தாழ்த்தி பேசுபவர்கள் மத்தியில் எப்போதும் மன அமைதியோடு அணுக கற்றுக் கொள்ள வேண்டுமே தவிர அதையே யோசித்து மனத்தைப் பதற்றம் அடைய செய்தல் ஆகாது. மனத்தின் அமைதி அனைவருக்கும் வலிமை தரும். மனப்

பதற்றம், மனச் சலனம் நம்மை தடமாற வைத்துவிடும் அதாவது இகழ்வார் முன் தலைகுனிய வைத்து விடும்.

இகழ்பவர்கள் முன் தைரியமாக நடக்க வேண்டும் என்றால் சரியாக வாழ வேண்டும். நம்முடைய தவறான செயல்கள்தான் அடுத்தவர்களை இகழ்ந்து பேச வாய்ப்பளித்து விடுகிறது.

“புகழ் புரிந்த இல்லிலோர்க்கு இல்லை
ஏறுபோல் பீடு நடை”

மனைவியோ, கணவனோ ஒழுக்கத்தில் தவறினால், நம்முடைய பகைவர்கள் மத்தியில் தலை குனிந்து நடக்க வேண்டிய கட்டாயம் வந்து விடும். எந்தப் பிழையும் செய்யலாகது.

‘மனதுக்கண் மாசிலான் ஆதல் நம் மனதளவிலே ஒழுக்கம் தொடங்குகிறது என்று செந்நாப் போதன் நவில்வது சாத்தியமானது. ஒழுக்கம் என்கிற பதம் மனிதனுக்கான ஆறறிவை அடையாளப்படுத்தும். நாகரிகம் நாவலில் தொடங்கி நடத்தையில் வெளிப்படும். ஆக மனத்துக்கண் மாசிலான் ஆதல் ஒழுக்கத்திற்கு சிறப்பு.

தண்டைனைக்கும், அதிகாரத்திற்கும் உட்பட்டு காண்பிக்கப்படுகிற ஒழுக்கம் அளவுக்கு மீறி ஊதப்பட்ட பலூனை போல ஒரு நாள் வெடிக்க வாய்ப்புண்டு. அது இயல்பாகவே உணரப்பட்டு வெளிப்படுத்துவதாகும். “செல்லம் கொடுக்க வேண்டும். ஆனால் கையில் பிரம்பு இருக்க வேண்டும். என்று அப்துல் ரகுமான் குழந்தையை எப்படி வளர்க்க வேண்டும்? என்கிற கேள்விக்கு பதில் சொன்னார். ஒழுக்கமாக நடந்து கொள்பவர்களை எல்லோருக்குமே பிடித்து விடும். அவனுடைய ஆளுமை எளியவர்களையும் மதித்து நடக்கும். நாகரிகமான நடத்தை உயர்வடைய செய்யும். அநாகரிகம் தாழ்வைத் தரும். ஏனெனில்,

“ஒழுக்கத்தின் எய்துவம் மேன்மை இழுத்தின்
எய்துவர் எய்தாப் பழி”

வலிமை நம்முடைய நேர்மையிலும் இருக்கிறது, நேர்மை யாருக்காகவும் அச்சப்பட வைக்காது. தன்னுடைய துன்பத்தை போக்கி கொள்ள இனிவானதை செய்தே ஆக வேண்டும் என்ற போதிலும் அதை தவிர்க்க மட்டுமே நேர்மையாளர்கள் எண்ணுவார்கள்.

வழக்கறிஞராக இருந்த போது லஞ்சம் வாங்கி வாதாடுங்கள் என்று காதலி வற்புறுத்திய போதும் மறுத்து விட்டவர் ஆபரகாம் லிங்கன். பல தோல்விகளுக்குப் பிறகு அமெரிக்க அதிபர் ஆனார். அப்ப தன் காதலியிடம் நான் அன்று லஞ்சம் வாங்கி இருந்திருந்தால் இன்று அமெரிக்க அதிபராகி இருக்க முடியாது என்றாராம். தன் வறுமையிலும் தன் பணியை துஷ்பிர்யோகம் செய்யாதவர் ஆபரகாம் லிங்கன். அறிவும் மனத்தெளிவும் மன உறுதியும் கொண்டவர்கள் துன்பம் வந்தாலும் அதை குறுக்கு வழியில் தீர்த்து கொள்ளாமல் நேர் வழியிலேயே அதை எதிர் கொள்ளவார்கள்

என்பதனை

> “இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
> நடுக்கற்ற காட்சி யவர்”

என்ற குறளில் வள்ளுவன் உணர்த்துகிறான்.

“அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்” என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுவதை போல இழுக்கம் மனிதனுக்கு துன்பத்தை தரும். ஒழுக்கம் சிறப்பைத் தரும். நல்ல வாழ்வியலுக்குச் சான்று மனத்துக்கண் மாசிலான் ஆதலும், ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மையுமே ஆகும். ■



# தெய்வங்களின் சாட்சி

மலையும் மலை
சார்ந்த இடமும்
குறிஞ்சி என்பது

உன் அழகும்
மலரும் சார்ந்த இடமோ
சோலை என்பது

காடும் காடு
சார்ந்த இடமும்
முல்லை என்பது

உன் கார்குழல் கொஞ்சம்
காற்றில் அசைந்ததில்
வாசம் வந்தது

வயலும் வயல்
சார்ந்த இடமும்
மருதம் என்பது

உன்னைப் பார்க்கின்ற
இடமெல்லாம் என்
கோவிலானது

கடலும் கடல்
சார்ந்த இடமும்
நெய்தல் என்பது

உன் காதல் என்னைச்
சேர்ந்ததில் இன்ப
கடலானது

மணலும் மணல்
சார்ந்த இடமோ
பாலை என்பது

உன் மனம் என்மனம்
சார்ந்த காதலே
வாழ்க்கையானது

குறிஞ்சியின்
தெய்வம்
முருகனடி

முல்லையின்
தெய்வம்
திருமாலடி

மருதத்தின்
தெய்வம்
இந்திரனடி

நெய்தலின்
தெய்வம்
வருணனடி

பாலையின்
தெய்வம்
காளியடி

ஐம் பெரும்
தெய்வங்களின் சாட்சியடி
நம் காதல் என்றும்
வாழுமடி

**கவிஞர்**
**பட்டுக்கோட்டை**
**காதர்**



இரா. சடகோபன்

# வெகுமதிகள் எப்போதும் உயர்வானவையே

ரமேஷ்மிகுந்தசோகத்தில்ஆழ்ந்திருந்தான் அவனால் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க முடிவதில்லை. எப்போதும் யாருடனும் கோபப்பட்டு கத்திப் பேசி சண்டைபோட்டுக் கொண்டே இருந்தான். இது தொடர்பில் அவன் அம்மா, அக்காமார், அண்ணா எல்லோரும் சொல்லிப் பார்த்து விட்டார்கள். அவன் திருந்துவாதாக தெரியவில்லை. பிறகு அவர்கள் அவனை அவன் பாட்டுக்கே விட்டுவிட்டார்கள். இருந்தும் அவனால் அந்த நிலையில் இருந்தே விடுபட முடிவதில்லை. இதனால் அவனது நண்பர்களும் அவனை விட்டு விலகிச் சென்றார்கள்.

அவனுக்கு ஒன்று மாத்திரம் நிச்சயமாக தெரிந்தது. அவன் விரும்பினாலும் அவனால் அவனது கோபத்தை கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதுதான். அவன் மிக குறுகிய நிமிடத்தில் பொறுமை இழப்பவனாக இருந்தான். எதற்காக கோபப்படுகின்றோம் என்பது பல சமயங்களில் அவனுக்கே புரியாமல் இருந்தது. இப்படி அவன் அப்பா அவனைத் தேடிக்கொண்டு வந்தார் அப்போதும் கூட அவன் அக்காவுடன் சண்டைபோட்டுக்கொண்டுதான்இருந்தான். அங்குவந்து தோட்டத்தின் ஒதுக்குப் புறமாக ஒரு மரத்தடியில் போடப்பட்டிந்த ஒரு குத்துக்கல்லில் அமர்ந்திருந்தான்.

அங்கே மரத்தில் குருவிகள் தமக்குள்

பேசிக் கொண்டதையோ, மைனாக்கள் சினுங்கியதையோ,மஞ்சக்குருவிகூவியதையோ அவனால் ரசிக்க முடியவில்லை. அப்படி என்னதான் அவனுக்குக்குப் பிரச்சினை அவன் கீழே கிடந்த கூலாங்கற்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கி எட்ட இருந்த குளத்தை நோக்கி வீசிக்கொண்டிருந்தான். அப்போதுதான் அவன் தந்தை அவனைத் தேடிக் கொண்டுவந்தார். அவர் கையில் பையில் போடப்பட்ட கொஞ்சம் ஆணிகளும் ஒரு சுத்தியலும் இருந்தது. அவன் அவற்றையும் அப்பாவையும் மாறி மாறிப் பார்த்தான்.

அவன் தந்தை அவனருகில் அமர்ந்து அவன் தோள்மீது தன் இடது கரத்தை நட்புடன் போட்டார். "இங்கே பார் ரமேஷ் நீ ஒரு கெட்ட பொடியன் அல்ல. ஆனால் உனக்கிருக்கும் இந்த காரணமின்றி பொறுமையிழக்கும் பழக்கத்தால் பலரிடமும் நீ கெட்டபேர் வாங்குகிறாய். இந்த பழக்கம் கூடாது. ஒன்று இதனை விட்டுவிட வேண்டும் என்று பல முறை உனக்குள்ளேயே நீ கூறிக்கொண்டு உன் ஆழ்மனதில் இந்தக் குரலை ஒலிக்கச் செய்ய வேண்டும் என புரிந்ததா?" என்று அவர் அவனிடம் கூறினார். வெறுமனே தலையாட்டினான்.

அவர்தான் கொண்டுவந்திருந்த ஆணிகள் அடங்கிய பையையும் சுத்தியலையும் அவனிடம் கொடுத்து இன்றில் இருந்து உனக்கு கோபம் வரும் போதெல்லாம் இதில் இருந்து ஒரு ஆணியை எடுத்து அந்த பலகை வேலியின் பின்புறம் நீ அடிக்கவேண்டும். தவறாமல் இதனை செய்ய வேண்டும் புரிந்ததா?

அவனும் ''ஆம்'' என்று அதற்கும் தலையாட்டினான் அவன் அப்பா அவன் தோளில் அன்புடன் தட்டிக் கொடுத்துவிட்டு தன் வேலைகளை கவனிக்கச் சென்று விட்டார்.

ரமேஷ் முதல் நாள் தனக்கு கோபம் ஏற்பட்டபோதெல்லாம் ஓடிச்சென்று பலகை வேலியில் ஒரு ஆணியை அடித்துவிட்டு வந்தான். அன்று மட்டும் அவன் முப்பத்தேழு ஆணிகளை அடித்திருந்தான். அதன் பின் அவன் தன் தந்தையின் சொல்லை மதித்து ஒவ்வொரு நாளும் அந்த வேலையைச் செய்து வந்தான். அவன் தன் தந்தை மீது மட்டுமே மிகுந்த அன்பு வைத்திருந்தான்.

அந்த இரண்டு வாரங்களில் அவன் தோட்டத்து பலகைவேலியின்பின்புறத்தில் அடித்த ஆணிகளின் தொகை நாளுக்குநாள் குறைந்து கொண்டே வந்தன. அதற்குக் காரணம் அவன் கோபத்தை கட்டுப்படுத்த பழகி இருந்தான் என்பதுதான். அவன் ஓடிச் சென்று பலகையில் ஆணியை அடிப்பதை விட கோபத்தை கட்டுப்படுத்துவதே இலகுவானது என நினைத்தான்.

அதன் பின் ஒரு நாள் அவனுக்கு பலகையில் ஒரு ஆணியையும் அடிக்கவேண்டிய தேவை ஏற்படவில்லை. அவன் கோபத்தை முற்றாகக் கட்டுப்படுத்தியிருந்தான். அவன் அந்த விடயத்தை தன் தந்தையிடம் போய் மகிழ்ச்சியுடன் தெரிவித்தான். அவரும் அவனை மகிழ்ச்சியுடன் ஆரத் தழுவிக்கொண்டு இத்துடன் பரீட்சை முடிந்து போய்விடவில்லை என்றும் அடுத்த கட்டமாக அவன் பலகையில் அடித்த ஆணிகளை ஒரு நாளைக்கு ஒன்று வீதம் பிடுங்க வேண்டும் என்று அவனைப் பணித்தார். அப்படிச் செய்வதன் மூலம்தான் அவன் அடைந்த வெற்றியினை பூரணப்படுத்த முடியும் என்றார். அவன் தன் தந்தையின் பேச்சை முற்றாக நம்பினான். அவன் மகிழ்ச்சியுடன் தந்தையின் கோரிக்கைக்கு இணங்கினான்.

நாட்கள் நகர்ந்து சென்றன. இக்காலத்தில் ரமேஷ் ஒரு தடவைகூட கோபப்படாமல் பொறுமை காத்து வீட்டாரிடம் நற்பெயர் வாங்கியிருந்தான். அவனது நண்பர்களும் ரமேஷ் மாறிப் போய்விட்டானே என ஆச்சரியமாகப் பார்க்கத் தொடங்கினர். ஒரு நாள் ரமேஷ் ஓடிச் சென்று தன் அப்பாவிடம் மிகச் சந்தோசமாக எல்லா ஆணிகளையும் பிடுங்கியாகி விட்டதெனக் கூறினான். அதைக் கேட்க அவருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

அவர் அவன் கைகளை கோர்த்துக்

கொண்டாவாறே... அந்த தோட்டத்து பலகை வேலி இருந்த இடத்துக்கு அவனை அழைத்துச் சென்றார். அவர் அவனைப் பார்த்து “ரமேஷ் நீ ஒரு பெரிய காரியத்தை செய்து முடித்திருக்கிறாய். அதற்காக நான் உன்னைப் பாராட்டுகின்றேன். ஆனால் இது மட்டும்தான் வாழ்க்கை அல்ல. நீ இன்னும் பல விஷயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். அங்கே பார் நீ ஆணிகளை அடித்து பின் பிடுங்கிய இடங்களிலெல்லாம் ஒரு கறுப்பு ஓட்டை விழுந்திருக்கிறது. அந்த வேலி முன்பு போல் ஓட்டைகள் இல்லாத வேலியாக மாற முடியாது. நாம் வெறுப்புடனும் கோபத்துடனும் பிறர்மீது விட்டெறியும் வார்த்தைகளும் இப்படித்தான் அவை பிறர் மனதில் அழியா வடுவை ஏற்படுத்தி விடுகின்றன.”

“சிலவேளை கோபத்தில் உன் நண்பனை நீ ஒரு கத்தியால் குத்திவிடலாம். பின்வருந்தி மன்னித்துவிடு என்று மன்னிப்பும் கேட்டுவிடலாம். அனால் நீ குத்தியதால் ஏற்பட்ட வடு அவன் உடம்பில் நிரந்தரமாக இருந்து அந்த கசப்பான அனுபவத்தை அவனுக்கு ஞாபகமூட்டிக் கொண்டே இருக்கும் என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். மன்னிப்புக் கேட்பதென்பதுஒருசெயலைசெய்யத்தக்கது.”

ரமேஷ் தன் தந்தையை ஏறெடுத்துப் பார்த்தான். அவன் தந்தை சொன்ன வார்த்தைகள் சக்தி வாய்ந்த மந்திரம் போல அவன் நெஞ்சைத் துளைத்துச் சென்றன. அப்படியானால் எத்தனை முறை அவன் தன் அப்பாவின் நெஞ்சையும் பிறரின் நெஞ்சிலும் துளைகள் போட்டு காயப்படுத்தியிருப்பான். இதனை நினைக்க அவனுக்கு வருத்தமாக இருந்தது.

‘’அப்படியானால்நான்செய்ததவறுகளை நீங்கள் மன்னிக்க மாட்டீர்களா அப்பா.” அவன்கண்களில் சில கண்ணிர்த்துளிகள் துளிர்த்து உருண்டோடிவந்தன. அவன் சோகமானதைக் கண்ணுற்ற அவன் தந்தை அவனை ஆரத் தழுவிக் கொண்டு அவன் கண்ணீரை தன் சுட்டுவிரலால் துடைத்து சுண்டி எறிந்தார்.

“இதில் வருதப்பட ஒன்றுமில்லை ரமேஷ். நமது வாழ்வில் நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டும். பலரும் பல விடயங்கள் தொடர்பில் நம்மை மன்னித்து மறந்து விடுவார்கள். ஆனால் வடுக்களை யாராலும் மாற்ற முடியாது. வாழ்வில் மீண்டும் புதிதாக ஆரம்பித்தல் என்று ஒன்றுமேயில்லை. நாம் இந்த கணத்தில் என்ன செய்கிறோம் என்பது தான் முக்கியம். அநேக சமயங்களில் நாம் விலைகொடுத்து வாங்குபவைகளை விட எமக்குக் கிடைக்கும் வெகுமதிகள் மதிப்பு வாய்ந்தவைகளாக இருக்கும்.” ரமேஷ் நீண்ட நேரம் தன் அப்பாவை அணைத்தவாறே அமைதியாக இருந்தான்.

## பொங்கி வரும் காதல்


ஓரப் பார்வை வீசிப்போனாய்
பாரமாக நெஞ்சை செய்தாய்
தூரமாக போகும் பெண்ணே
ஈரம் நிறையும் கண்ணில் கண்ணே..

மௌனம் பூக்கும் இதழாய் ஆனாய்
கவனம் ஈர்க்கும் வாசம் கொண்டாய்
சலனமின்றி போகும் வாழ்வில்
கலக குறும்பை வீசிச்சென்றாய்.!

அங்கு நீயும் பேசி நிற்க
இங்கு நானோ புலம்பி தவிக்க
பொங்கி வரும் காதல் தனை
எங்கு நானும் எழுதி வைக்க.!

முதுமை ஒரு குறையா என்ன
பதுமை இன்றும் நீயே கண்ணே
பொதுவில் நின்று தவிக்கும் என்னை
அருகில் வந்து அணைப்பாய் பெண்ணே..

**- விஜயகுமார் வேல்முருகன்**



# ஐ லவ் யூ..

## உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சு இருக்கு..

உலகின் மிக சிலிர்ப்பான வார்த்தை.. சொல்வதைவிட கேட்பதற்கு மிக அருமையாக இருக்கும்.

டாஸ்மார்க்க விட மிக போதையானது. அதே சமயம் மலிவானது. ஒரே நேரத்தில் மினிமம் ஐந்தாறு பேர்கிட்ட லவ் வரும் அளவு சமூக வலைத்தளங்கள் காதலை மலிவாக்கி விட்டுவிட்டது....

ஆறாம் வகுப்பு படிக்கும் குழந்தைகள் துவங்கி, அறுபது வயது தாண்டியும் இப்பொல்லாம் லவ் (?) வருது. தற்போது எல்லார் குடும்பத்திலும்பிள்ளைகள் வளர்ந்து வருகின்றார்கள்.

தங்கள் பிள்ளைகளின் ரிசல்ட் ஆயிர கணக்கானோர் மகிழ்ச்சியுடன் பதிவு செய்திருந்தனர். என் நண்பர்களிலும் நூற்றுகணக்கான மாணவர்கள் இருப்பதால் அவர்களுக்கான பதிவு இது.காதல் வரக்கூடாது என்றோ, தவறு என்றோ சொல்லவில்லை.

ஆனால்அதுநிச்சயமாகஉங்கள்படிப்பை, லட்சியத்தை, வாழ்க்கையை பாதிக்கும்.. மன நிலையை பாதிக்கும்.அதனால் யோசித்து முடிவெடுங்கனு சொல்றேன். பார்த்தாலே பசித்தீரும் என்று படித்து கொண்டிருக்கும் காலத்தில் பார்த்துக்கொண்டு இருந்தால் எதிர்கால வாழ்க்கை தோல்வியில் முடியும்.

எந்த தெய்வீக காதலிலும் தோல்வி யுற்றவனை பெண்கள் விரும்பமாட்டாங்க. எனவே காதலையும் இழந்து படிப்பையும் இழந்து வாழ்க்கை கேள்விக்குறி யாகிவிடும். எனவே மாணவர்கள் உங்க காதலை pause செய்து வையுங்கள். நீங்கள் படித்து, வேலை வாய்ப்பை ஏற்படுத்திகொண்டு திருமணம்செய்யும் காலம் வரை உங்கள் காதல் காத்திருக்குமானால் நிச்சயம் திருமணம் செய்துக்கொள்ளலாம்..

ராமாயணத்தில் கூட அண்ணலும் நோக்கி அவளும் நோக்கின போதே ஒரு ஈர்ப்பு வந்தது உண்மைதான்.

ஆனால் ராமன் வில்லை முறிக்காமல் இருந்திருந்தால்சீதா கண்டிப்பா ராமனை கழட்டிவிட்டு இருந்திருப்பாங்க. ராமன் தன்னை பலசாலியாக நிரூபித்ததால் மட்டுமே அந்த காதல் ஜெயித்தது. அன்றைக்கு காதல் ஜெயிக்க ராமன் வில்லை வளைத்தான், இன்றைக்குநம் காதல் ஜெயிக்கனும்னா நம் தகுதியை உயர்த்தி கொள்ள வேண்டும். படிப்பு, பதவி, பணம் போன்ற வில்லின்மேல் நம் வெற்றியை நிரூபித்தால் காதல்கள் உங்கள் காலடியில் சரணடையும்.

இது ஒரு பக்கம் இருந்தாலும், இன்னொரு பக்கம், உங்கள் மேல் அதிக அக்கறை கொண்டவர்கள் பெற்றோர்தான்.

எனவே உங்கள் வாழ்க்கையை அவர் களிடம் ஒப்படையுங்கள். உங்கள் பெற்றோர் உங்களுக்கு தீங்கிழைப்பார்களா??

அது அவர்களுக்கு நீங்கள் செய்யும் உன்னதமான மரியாதை. அல்லது ஒரு நல்ல நிலைக்கு வந்த பின் பெற்றோர் ஆதரவுடன் காதலித்தவரை திருமணம் செய்யுங்கள்.. எந்த தவறும் இல்லை.. இது ஒரு கட்டாயம் இல்லை..ஒரு அறிவுரையே.

**ச.இராஜ்குமார்**
*திருப்பத்தூர்*

# வெறுப்பு

மணிமாலா மதியழகன்

“அம்மா என்னோட ஒரு ஷூவைக் காணோம்” பள்ளிக்குக் கிளம்பிய மகள் சகானாவின்கூக்குரல்தீயணைப்புவண்டியின் அபாயச் சங்கொலியைப் போலக் கூடத்தை அடைந்தது. மகளை பள்ளிக்கு அனுப்பியப் பின் நான் வேலைக்குக் கிளம்பதான் நேரம் சரியா இருக்கும். எனக்காகக் காத்திருந்து துவண்டு போயிருந்த தோசையைக் கையிலெடுத்தேன். வயிற்றில் திணித்துக் கொண்டே “அங்கதான் இருக்கும் பாரு” பதிலாய் என் குரல் விழுந்தது. ‘எல்லாத்துக்கும் உடனே அம்மாதான். கொஞ்சமும் குனிஞ்சு நிமிந்து பாக்குறதில்லை.’ தண்ணீரை எடுத்தேன்.

“பாத்துட்டேன்... இல்லம்மா...!” கணமும் தாமதிக்காத பதில் அசட்டையாய்ப் பிறந்தது.

‘இல்லாம எங்கப் போயிடும்? நாலாவது படிக்கிற பிள்ளை... தானா எதுவும் செய்யுறதில்லை...’ மகளின்மீது எழுந்த கோபம் என்னோடு வீட்டுக்கு வெளியே நகர்ந்தது. சகானாவின் ஒற்றைக் காலணி என்னிடம் கண்ணாமூச்சுக் காட்டியது.

‘ம்... எங்க போயிருக்கும்?’ கணவரது வேண்டாத காலணிகள்தான் அலமாரியை அடைத்துக் கொண்டிருந்தன. அவற்றைத் தூக்கிப் போட்டுட்டாலும், தன்னுடைய சொத்தையே அழிச்ச மாதிரி துடிச்சுடுவார். பள்ளிக்கும், வேலைக்கும் நேரமாகிறது எனக் கைக்கடிகாரம் சொல்ல அநியாயத்திற்கு எரிச்சல் மண்டியது.

“சரி.. சரி... நீ வேற ஷூவைப் போட்டுக்கிட்டுப் போ.”

“சொன்னேனே கேட்டீங்களா?” தன் பக்க நியாயத்தை விளம்பிவிட்டு எங்களது வீட்டுக்கு எதிரிலேயே இருக்கும் ‘ரூலாங்’ தொடக்கப்பள்ளிக்கு மகள் விரைந்தாள்.

காலணியைத் தேடியதில் சில நிமிடங்கள் தொலைந்திருக்க, மனது ஆறிய தோசையை முற்றிலுமாக நிராகரித்தது. கம்பெனி வண்டியை விட்டுவிடக்கூடாதே என்ற தவிப்பும் சேர்ந்துகொள்ளக் கால்களை எட்டி வைத்தேன். ‘லேக்சைட் எம்ஆர்டி’க்கு அருகில்தான் கம்பெனியின் வண்டி வந்து நிற்கும். என்னதான் வீட்டுக்குப் பக்கத்திலேயே வண்டி வந்து அழைச்சாலும் ஒவ்வொரு நாளும் ஓட்டமாயில்ல கிளம்ப வேண்டியிருக்கு! ஏழு இருபதுக்கு கம்பெனி வண்டியை எடுத்தால் எட்டுக்கெல்லாம் ‘துவாசில்’ இருக்கும் பணியிடத்துக்குப் போயிடலாம்.அதைவிட்டுட்டாகாலைநேரம் உக்கிரமா ஆகிடும்! டாக்சிகள் அனைத்தும் செந்தூரத்தை இட்டுக் கொண்டதைப்போலச் சிவப்பு விளக்குகளோடு போக, பஸ்ஸைப் பிடிச்சாலும் வேலைக்கு லேட்டாகிடும். ‘இன்னும் சில ஆண்டுகள்ல துவாசுக்கு ‘எம்ஆர்டி’ வந்துடும். அப்பதான் இந்தப் பிரச்சினையும் ஓரளவுக்குத் தீரும்’ என்னும் எண்ணத்தைக்கொண்டு மனத்திற்கு ஆசை காட்டி புறப்பட்டேன்.

“என்னோட ஷூ கிடைச்சுதாம்மா?” பள்ளி முடிந்து வந்த சகானா கேள்வியை எழுப்பினாள்.

“காணோம்... நீதான் எப்பவும்போல அங் கொண்ணும் இங்கொண்ணுமா விட்டிருப்பே. யாராவது அப்படியே எத்திட்டுப் போயிருக்கலாம்”

சொல்லிக்கொண்டே குழம்பைத் தாளித்தேன்.

அவள் என்னைப் பார்த்த பார்வையில் கிலோ கணக்கில் கண்டனம் நிறைந்திருந்தது. ‘என்னவோ பொறுப்பின் சிகரம் மாதிரி பார்வை!’ குழம்பின் வாசம் வீட்டை ஆக்கிரமித்தது.

வழக்கம்போல எதைப்பற்றியும் யோசிக்கக்கூட அவகாசமின்றி நாட்கள் விரைந்தன.

# நிஜமான கனவு...

கண்விழித்தேன்
காணவில்லை
என்ன இது
ஏனிப்படி ஆனது
என் மனது
அள்ளி வைத்த
அன்பை
சொல்லி
வைத்து
வழங்கிவிட்டேன்

கொடுத்ததும்
பெற்றுக்கொண்டேன்
வஞ்சமின்றி
இனி என்ன?

சரி சரி போய்
வேலையை பார்...
என்றுதான்
உள்ளமது
கூற

எரிச்சலுடன்
எழுந்து
நகர்ந்தேன்...
காணவில்லை
அவனை
என்றே ...

**- தென்றல் கவி**

“கமலி என்னோட ஒரு ஷூவைக் காணோம்” வேலைக்குக் கிளம்பிய கணவரின் குரல் அமிலத்தைப்போல என் செவிகளில் நுழைந்தது.

“நீங்க என்ன சின்னப் பிள்ளையா? அங்கே இல்லைன்னா அலமாரியைத் திறந்து பாருங்க. அதைவிட்டுட்டு...” என்றவள் மகளுக்கு இரண்டாவது பின்னலைப் போட்டுக்கொண்டிருந்தேன்.

“பாக்காம இருப்பேனா... இங்க பாரு, ஒண்ணே ஒண்ணுதான் இருக்கு...!”

“நீங்க வெளியே கண்டபடி போட்டுட்டு வந்தீங்களா?”

“நான் என்ன சின்னப்பிள்ளையா? நேத்து வேலை முடிஞ்சு வந்தப்ப ‘ஷூ ரேக்’ உள்ளே எடுத்து வச்சிட்டுதான் வந்தேன். இந்த ஒத்த ஷூகூட அங்கேதான இருந்திச்சு!” என்றவரே அலமாரியின் அடுக்குகளில் மீண்டும் அலசினார்.

“இதேமாதிரிதான் அன்னைக்கு என்னோட ஒரு ஷூவையும் காணோம்பா. அதுக்கும் அம்மா என்னைத்தான் திட்டினாங்க!” கிடைத்த சமயத்தை சகானா சரிவரப் பயன்படுத்திக்கொண்டாள்.

“அப்படியா? ஒத்த ஷூ மட்டும் எப்படிக் காணாமப் போகும்?” கணவரது ஆச்சரியம் அவர் கண்களில் படிந்தது.

என் சிந்தனை தொற்றுநோயைப்போல அதிவேகமாக அக்கம்பக்கத்தார் மீது பரவி, இரண்டு வீடுகள் தள்ளியிருக்கும் ஹமீது மீது வந்து நிலைத்தது. உயர்நிலை ஒன்றோ இரண்டிலோ படிக்கிறான். ஆனாலும் அவனது பாவனைகள் அனைத்திலும் கைதேர்ந்த உதாசீனம் நிறைஞ்சிருக்கும். மின்தூக்கிக்கு மிக அருகில் யார் வந்தபோதும் எனக்கென்ன என்பதைப்போல மூடுவான். அது மட்டு மல்லாமல் கீழே இருக்கும் பொருள் எதுவாயினும் அவனுக்கு

காற்பந்துதான். அவன் எத்திய பந்து எங்க வீட்டுத் தொட்டிச்செடியைப் பதம் பார்த்தும் மரியாதைக்குக்கூட மன்னிப்பு என்ற சொல்லைக் கூறாமல் சென்றது இதுநாள்வரை என் மனத்தில் ஆணியாய்க் குத்திக்கொண்டிருக்கிறது. என் நெருங்கிய சிநேகிதி வாங்கித் தந்த அரிய வகை ரோஜாச்செடியை அதன் பிறகு காப்பாற்ற முடியவில்லை. எனது எண்ணத் தூரிகையைக்கொண்டு அவனைக் குற்றவாளி என்று சுவரோவியமாக்க, அனைத்தும் பிசகின்றி கனகச்சிதமாய்ப் பொருந்தியது.

என்னளவில் உறுதிப் படுத்தப்பட்ட சந்தேகத்தை என்னவரது காதுகளில் போட, "வீணா அடுத்தவங்க மேல பழியைப் போடாதே" என்னை நிமிர்ந்துகூடப் பார்க்காமல் நகர்ந்தார்.

"அப்போ ஒத்த ஷூவுக்கு மட்டும் கால் முளைச்சா காணாமப் போகுது?"

விடையறியாக் கேள்வியைக் கன்றிய முகத்துடன் நான் தொடுக்க, பதில் பேச மனமற்று வேறு ஷூவை நுழைத்துக்கொண்டு கிளம்பினார். அவரது புறக்கணிப்பும் சேர, அன்றைக்கும் எனது சில நிமிடங்கள் காணாமற் போனதுதான் நான் கண்ட பலன்! திடீர் வெள்ளத்தால் நாலாபுறமும் சிதறியோடும் நதியைப்போல மனம் குற்றவாளியை இனங்காண முடியாது தவித்தது.

அடுத்தடுத்துவந்தநாட்களில்என்னுடைய காலணியில் ஒன்றும் காணாமல் போனது. அது கொஞ்சநாளுக்கு முன்னே என்னோடு இணைந்த கால்வலி பிரச்சினைக்காக இந்தியாவிலிருந்து என்னுடைய அக்கா வாங்கி அனுப்பிய செருப்பு. வலி இடம் மாறி மனத்தைத் தாக்க, தயவு தாட்சண்யம் பாராது காலணி அலமாரி கூடத்தை அடைந்தது. அப்படியிருந்தும் ஒருநாள் உள்ளே எடுத்து வைக்க மறந்துவிட்ட சகானாவின் காலணியில் ஒன்றும் மாயமானது!

சேர்ந்திருக்கும் ஒற்றைக் காலணிகளைத் தூக்கிப் போடவும் மனமில்லை. அவற்றின் இணை எங்காவது கிடக்காதா என்ற நப்பாசையில் வெளியே போகும்போதும் வரும்போதும் தேடியலைந்து கண்கள் சோர்ந்தன. ஒற்றைக் காலணிகளை எந்த நம்பிக்கையில் இன்னும் வைத்திருக்கிறேன்? இது வேற அவ்வப்போது என்னைப் பாத்து பழிக்கிற மாதிரியிருக்கே என்று தோன்ற, மனமின்றியே அவற்றைக் குப்பைத்தொட்டியில் வீசினேன். வேண்டுமென்றே இந்த விஷமத்தனத்தைச் செய்பவர் யாராக இருக்கும்? உடல் அலுவலகத்தில் இருந்தாலும் மனம் அந்தக் கருப்பு ஆட்டைத் தேடியலைந்தது.

"ம்... ஒருவேளை அந்தப் பையன்தான் இந்த வேலையைச் செய்யுறானோ?" கணவரது முகத்தில் சந்தேகப் புள்ளிகள் தென்பட்டன. அவரது பொறுமையையும் சோதிக்க ஒருவன் இருக்கிறானே!

"வீணா அடுத்தவங்க மேல பழியைப் போடாதீங்க."

'யாரோ போடும் ஆட்டத்திற்கு இவரிடம் மல்லுக்கு நின்னு ஆகப் போவதென்ன?' மனம் நியாயத்தின் பக்கம் நின்று வினா தொடுத்தது. இந்தச் சம்பவங்களுக்குப் பிறகு ஹமீதின் அலட்சியப் பார்வையும், செயலும் என்னைக் கூடுதலாக வெறுப்பேற்றி பார்த்தன. 'இவனைல்லாம் பெத்ததோட கடமை முடிஞ்சதுன்னு கையைக்கழுவிட்டாங்களோ?' மனம் சம்மந்தமே இல்லாமல் அவன் பெற்றோரையும் சேர்த்து நிந்தித்தது. 'பேசாம நம்ம சந்தேகத்தை அவனிடமே கேட்டுடலாமா? ம்... கேட்டு ஏதாவது ரசாபாசமா ஆகிட்டால்? நம்மிடம் ஆதாரம் என்ன இருக்கிறது? அலையலையாய்க் குழப்பம் மிதந்தது.

ஒருநாள் மின்தூக்கியில் வரும்போது "எப்படின்னே தெரியலங்க... எங்க வீட்ல ஒத்தச் செருப்பு மட்டும் அடிக்கடிக் காணாமப் போகுது" என்றார் ஹமீதின் அம்மா.

அந்த வார்த்தைகள் தந்த தாக்கத்தில் என் மன ஓவியம் கடிதில் கலைந்தது.

நினைவென்னும் பாசியில் காலை நிறுத்த முடியாது நான் வழுக்கிச் செல்ல, என் கணவர் கற்பனையில் என்னைக் கண்டு எள்ளி நகையாடினார். இருந்தும் மிக அவசரமாகச் சுதாரித்தேன்.

“உங்க வீட்டிலுமா?”

அதுவரை பளீரென்று இருந்த மனத்தில் கிரகணம் பிடித்ததைப்போல சூனியம் கவிந்தது. இந்த வீட்டிற்கு வந்து ஏறக்குறைய மூன்றாண்டுகளாகியும் லேசா கசியும் புன்னகையுடன் ஒரு வணக்கம், அதை மிஞ்சிப்போனால் விழாக்களுக்கான வாழ்த்துகளுடன் முடித்துக்கொள்ளும் பழக்கம் அன்று உடைந்தது. காரிடாரில் நின்றுகொண்டே காணாமல் போகும் ஒற்றைக் காலணிகளைப்பற்றிக் கால் கடுக்குமளவுக்கு அளவளாவினோம். நசிந்திருந்த மனத்திற்கு அது சற்று ஆறுதலாகவும் இருந்தது.

கப்பும் கிளையுமாய் மதாளித்து வளர்ந்த கோபத்தில், ‘சக மனிதர்களைப்பற்றி எவ்வளவு சீக்கிரம் தப்பான அபிப்பிராயம் கொண்டுவிட்டாய்?’ என உள்ளம் சாடியது! தொட்டியை உடைத்ததற்கு அவன் வருத்தம் தெரிவித்திருந்திருக்கலாம்! கசந்திருந்த மனம் ஹமீதிடம் மானசீகமாக மன்னிப்பை இறைஞ்சியது. சந்தேக வட்டத்திலிருந்து அவன் அவசரமாக நீக்கப்பட்டான். நீரைப்போல வடிவமற்று நினைவுகள் தாறுமாறாக ஓட அந்த வட்டத்தில் யாரைப் பொருத்தலாம் என மனசு கிடந்து தவித்தது.

பக்கத்து வீட்டிலுள்ள சீன கணவன், மனைவி உறங்குவதற்காக மட்டுமே கூட்டை நாடி வரும் பறவைகள். அதற்கடுத்ததாக உள்ள வயதான மலாய் தம்பதிகள், தடுமாறாது அவங்கக் கால்ல செருப்பை நுழைக்கவே சிரமப்படுபவர்கள். இன்னொரு வீட்டில் குடியிருக்கும் வெளிநாட்டு ஊழியர்களோ அதிகாலையில், குதிரைப் பந்தயத்தைப்போலக் கிளம்பி இரவில் நொண்டிக் குதிரையைப்போல வீட்டுக்குத் திரும்பி வருபவர்கள். அந்தத் தளத்தில் இருப்பவர்களை ஞாபகங்களின் எல்லையில் கொண்டு வந்து நிறுத்திப் பார்த்தும் முகங்கள் ஒட்டாது சென்றன. ஐயத்தின் வீரியத் துளிகள் அந்தக் கட்டடம் முழுக்கப் பரவின!

‘நாமதான் பிரச்சினையிலிருந்து தற்காத்துக் கொண்டோமே அப்புறம் ஏன் வீணான சிந்தனை?’ என்று அறிவு கேள்வியெழுப்பும்போது உள்ளம் அடங்கும். கொஞ்ச நேரத்திலேயே ‘ஒரு செருப்பை மட்டும் யார் எடுத்துக்கிட்டுப் போவாங்க?’ எனச் சிலிர்த்துக் கொண்டு அது தலையெடுக்கும்.

அடுத்து வந்த இரண்டு மூன்று வாரங்கள் சிங்கப்பூருக்கே உரிய, நேரமே போகலைங்கிற பேச்சுக்கே இடமில்லாது உதயமாகி உதிர்ந்தன!

“அம்மா ரேச்சல் வீட்டிலும் நம்ம வீட்டைப்போலவே ஒரு ஷூ மட்டும் தொலைஞ்சு போகுதாம்!”

‘இரண்டு ‘புளோக்’ தள்ளியிருக்கும் ரேச்சல் வீட்டிலுமா? கொஞ்ச காலமாகக் களவின்றிப் போனதால சற்றே தணிந்திருந்த மனது, சகானா சொன்னதைக் கேட்டு நீராவியாய்ப் படிந்து உறுத்தத் தொடங்கியது.

சிங்கப்பூரில் ஒரு திருட்டுச் சம்பவம் என்பதே அதிசயம். இதில் ஒற்றைச் செருப்பு மட்டும் களவாடப்படுகிறதென்றால்...? மனத்தைக் குலுக்கி நினைவைச் சலித்துப் பார்த்தாலும் குற்றவாளி யாரென அறிவுக்கு எட்டலையேங்கிற எரிச்சல் அதிகரித்தது. ஹமீதை சம்பவங்களுக்குக் காரணமாய் நினைத்தபோது இருந்த நிம்மதியும் இழந்து கருப்பு ஆட்டைத் தேடியலைந்த மனம் சோர்வுற்றது. எங்காவது ஜோடியாக இருக்கும் செருப்பைப் பார்த்தாலே ஏதோ நிறைவைக் கண்டதைப்போலானது.

பக்கத்து வீட்டு சீன இளைஞன் தன்னுடைய ஒற்றைக் காலணிகள் காணாமற் போவதைப்பற்றி ஒருநாள் என்னவரிடம் சொன்னான். திருட்டுச் செய்திகள் பழகிய மனத்திற்கு, யாராவது செருப்புக் காணாமப்

போகலைன்னுச் சொன்னால்தான் அது ஆச்சரியமாய்த்தோன்றியது. இதற்கெல்லாம் காரணகர்த்தா எட்டிப்பிடிக்க முடியாதளவில் சென்றுகொண்டிருந்தான். இழப்பின் மீதான வலி மறைந்து அந்தக் குற்றவாளியின்மேல் வன்மத்தின் அளவு நஞ்சைப்போல உயர்ந்துகொண்டே போனது.

“இதைக் கண்டுபிடிச்சே ஆகணும். நாம் ஒரு ‘சிசிடிவி’ கேமராவை வெளியில் வைப்போம். யாரிடமும் இதைப்பற்றி மூச்சுவிடாதே” என்றார் கணவர். சகித்துக்கொள்ள முடியாமையின் விளிம்பு நிலையில் இருந்தார். அது, இப்போதுள்ள மாதிரி திரும்பும் இடமெல்லாம் துப்பறியும் விழிகள் இல்லாத காலம்.

கணவரது கூற்று சமயசஞ்சீவியைப்போல எனக்குத் தோன்றியது. எவ்வளவு நாட்கள்தான் எச்சரிக்கையாக இருக்க முடியும்? முக்கியமா யார் அந்த ஆளென கண்டுபிடிக்கப் போறோம் என்ற நினைவே என்னை லேசாக்கியது.

நாங்கள் நினைத்த மாதிரிக் கண் காணிப்புக் கருவியை வீட்டுக்கு வெளியே வைப்பது அவ்வளவு இலகுவானக் காரியமாக இல்லை. எதார்த்தம் தள்ளி நின்று எங்களை முறைத்தது. விதிமுறைகள் நிறைந்த சிங்கப்பூரில் ஏன், எதற்கு என்ற கேள்விகளுக்குச் சளைக்காது பதிலளிக்க வேண்டியிருந்தது. வீடமைப்பு வாரியத்திடம் அதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்து, காத்திருந்து ஒருவழியாக நினைத்ததைச் சாதித்தோம். வேண்டாத காலணியொன்று வேண்டுமென்றே வீட்டுக்கு வெளியே விடப்பட்டது. குற்றவாளியைக் கழுமரமேற்ற ஆர்வத்துடன் காத்திருந்தோம்!

தினமும் சகானா உறங்கியபிறகு, கண்காணிப்பு கேமராவில் பதிவாகியுள்ளதைப் பார்ப்பதும் ஒரு கடமையாய் ஆனது. சில நாட்கள் கணினியில், சிங்கையில் தேடலின்றி வளரும் பூனைகளின் நடமாட்டம் மட்டுமே தலைகாட்டின. கொழுகொழுவென்றிருக்கும் பூனைகள் ஹமீதின் வீட்டுப் பக்கமாகப் போவதும்,



# தன்முனைக் கவிதைகள்

ஜோடிக் கிளிகளுக்கு
கூடிமகிழ்ந்திட ஆசை
கிளி சோதிடன்
கூண்டுடன் நடமாட்டம்.

பகிர்ந்து உண்ணும்
பண்போ விலங்கிற்கு
தனக்கு என்பதே
மனிதனின் இலக்கு.

ஐந்தறிவின் இரக்கம்
அன்பால் இணைப்பு
ஆறாம் அறிவு
சுயநலம் கொண்டதோ.

விலங்குகள் கிடைத்ததை
பகுத்து உண்டன.
புத்தகத்தில் பாடல்
நூலோர் தொகுத்ததாம்.

நடவுசெய்த பயிர்
விரைவான வளர்ச்சி
விவசாயி வாழ்வோ
வீழ்ச்சி நிலையில்.

ஆங்கில ஆர்வம்
மிகுந்து போனது
ஆண்ட தமிழ்
வேண்டாம் என்கிறது.

அரிதாரம் பூசிய
கோமாளி சிரிப்பதற்கு
அவனுள்ளம் அழுகிறது
சிரிப்பதை பார்த்து.

காதலில் காலமும்
நேரமும் தெரியாது
காலம்பல கடந்தும்
ஓயாது பேசும்.

காதல் நிகழ்காலத்தை
மட்டுமே நினைக்கும்
எதிர்காலம் பற்றி
நினைத்திட மறுக்கும்.

காதல் உயிரையும்
கொன்று போடும்
காலங்கள் பலவும்
உயிரோடு வாழும்.

**வா.சண்முகம்**
கும்பகோணம்

# தாய்மை தரிசனம்

சில்லிட்ட தரை மேல்
புரள்கின்றன குட்டிகள்.
காம்பைத்தேடி உறிஞ்சுவது
மட்டுமே தெரிந்த
கண் திறவாப்பிஞ்சுகள்.


உணவு தேடப் பிரிதலும்
துணை நிற்றலும்
ஒன்றுக்கொன்று எதிரானவை
என்கினும்
சமாளிக்கிறது தாய்.

குட்டிகளுக்கு கீழ் விரிக்க
கனத்த அட்டை
உண்ண உணவு
என நிற்கும் என்னை நோக்கி

சினந்தெழுந்து தீ விழித்து
மூரி நிமிர்ந்து
முழங்கிப் புறப்பட்டு வரும் அதை
என்ன சொல்வது?

பாச வேகம்...
பாதுகாப்புணர்வு...
மூடத்தனம்...
மூன்றுமே தான்

**-கவிஞர் கானப்ரியன்**




அவங்க வீட்டுச் செல்வங்கள் அவைகளுடன் செல்வதுமாகஇருந்தன.அதைப்பார்க்கையில் கணவரது முகத்தைக் காணச் சகிக்கவில்லை. பறவை சிக்காத கண்ணியைப்போல நாங்கள் போட்டு வைத்தக் காலணி பரிதாபமாய்க் கிடந்தது. ஆரம்பத்திலிருந்த ஆர்வம் போகப் போக நீர்த்துப்போகத் தொடங்க, அந்த வருத்தத்தைப் பொறுக்க முடியாது எரிச்சலும் பொங்கியது. அந்த முகமறியாதவன் எங்களைப் பார்த்து கைகொட்டிச் சிரிப்பதைப்போலத் தோன்ற அன்னியோன்யமான வீடே எனக்கு அசாதாரணமாய்த் தெரிந்தது.

ஒருநாள், மின்தூக்கியிலிருந்து நள்ளிரவின் நிசப்தத்தைச் சற்றே விலக்கியவாறு சக்கரவண்டியை உருட்டிக்கொண்டு ஒருவர் வந்தார்.நேரத்தைநாடிகணினியில்என்கண்கள் போயின. இரண்டு மணி! பாரபட்சமின்றி தூக்கம் மக்களை விழுங்கியிருந்த சமயம். இந்த நேரத்தில் இந்தப் பகுதியில் இவருக்கு என்ன வேலை? அடுப்புக்கரியை மையக் கடைந்ததைப்போன்ற இருளில் அந்நபரது முகம்சரியாகத்தெரியவில்லை.பக்கத்துவீட்டில் நின்ற சக்கரவண்டியிலிருந்த அந்தக் கருப்பு அசைவைக் கண்டு மனத்தில் சந்தேகம் பிறக்க, என் இதயத்திலிருந்து பொறுக்க முடியாத துடிப்பு எழுந்தது.

சின்ன டார்ச்சை அடித்துப் பக்கத்துவீட்டு ஷூ ரேக்கில் உருவம் தேடியது. ‘அட... ஒற்றைக் காலுடன் இருக்கும் இவர் சக்கரவண்டியில வந்து கீழேயுள்ள சாப்பாட்டுக் கடையில் பொழுதெல்லாம் உட்கார்ந்திருப்பவராச்சே! அந்த மனுஷனா இப்படி?’ ஆர்வத்தின் நுனியில் நின்றுகொண்டிருந்தவளின் காலை யாரோ இழுத்து விட்டதைப்போலானேன். கணினியை விட்டுவிட்டு அதிர்வோடு எங்களது பார்வை சந்தித்துக்கொள்ள ஏதோ ஒன்று எங்களது பேச்சை உறிஞ்சியிருந்தது. எங்க வீட்டுக்கு வெளியே கிடந்த செருப்பில் ஒன்றை எடுத்துக்கொண்டு சக்கரவண்டியை உருட்டியபடி அவர் போக, வீரியமிழந்த மனத்தோடு கணினியைப் பார்த்துக் கொண்டிருந்தோம்! ■

# ஆறறிவு

—பட்டுக்கோட்டைராஜா

இவர்கள் இந்த மலைப்பிரதேசத்துக்கு வந்து தங்கிய நாள்முதலே ஜானிதான் வீட்டைக் காவல் காக்கிறது. தேடாமல் வந்த சொந்தம்.

வாசலுக்கு வந்த நாளில் நிர்பயா சோறு வைக்கப் போக, அடுத்தடுத்த நாட்களில் குறிப்பிட்ட நேரத்துக்கு அது வாசலில் வந்து குரல் கொடுத்தது. சொல்லாமலே அது இவர்கள் வீட்டில் `வாட்ச்மேன்' வேலையும் பார்க்கத் தொடங்கிவிட்டது.

பால்காரன் கேஸ் சிலிண்டர் கேன் வாட்டர் என்று அறிமுகமானவர்கள் தவிர புதுமுகங்கள் யார் வந்தாலும் ஜானியின் அனுமதியின்றி வீட்டுக்குள் நுழைய முடியாது. அந்த ஜீவனுக்கு நிர்பயாதான் ஜானி என்று பெயர் வைத்தாள். அன்பைப் பொழிந்தாள். அதற்குக் குளிரெடுக்குமென `ஸ்வெட்டர்' பின்னிப் போட்டு விட்டாள். ஜானி இந்த வீட்டின் ஒரு ஜீவனாகிப் போனது.

நிர்பயா எது செய்தாலும் அவள் தாய் சிபாகந்தி தடுப்பதில்லை. அவளின் நோக்கம் ஒன்றேஒன்றுதான்.அது நிறைவேறும் வரைதான் இந்த மலைவாசம்.

நிர்பயா இப்போது நிறைமாத கர்ப்பிணி. கழுத்தில் தாலி இல்லாமல் மகள் கருவைச் சுமப்பது ஊர்உறவுகளுக்குத் தெரியக்கூடாது என்பதற்காகவே இந்தத் தலைமறைவு வாசத்தை சிபாகந்தி ஏற்றுக் கொண்டிருந்தாள்.

நிர்பயா கல்லூரிக்குச் சென்று தாமதமாய்த் திரும்பிய ஒருநாள் இரவில் முகம் தெரியாத இளைஞர்கூட்டம் அவளைச் சீரழித்துத் தெருவில் வீசிவிட்டது. நிர்பயா நினைவு பிறழ்ந்து மாதக் கணக்கில் மருத்துவ மனையில் இருந்த போதுதான் அவள் கருவாகியிருந்த செய்தி சிபாகந்திக்குத் தெரியவந்தது. நாட்கள் கடந்து போனதால் கருச்சிதைவு செய்ய இயலாது போனது.

தனிமனுஷியாய் நிர்பயாவை வளர்த்த சிபாகந்தி தானாகவே ஒரு முடிவெடுத்தாள். தன்மகள் கருவாகியிருக்கிற செய்தியை வெளியே சொல்ல வேண்டாமென நிர்வாகத்திடம் கேட்டாள் சிகிச்சைக்காக வெளிநாடு செல்வதாய் உறவுகளிடம் பொய்சொல்லிவிட்டு இங்கே வந்துவிட்டாள்.

அன்றிரவு நிர்பயா அழகான ஓர் ஆண்மகவை ஈன்றெடுத்துவிட்டு மூர்ச்சையானாள். அவளறியாமல் குழந்தையை எடுத்துச் சென்ற சிபாகந்தி மலைச் சரிவில் வீசிவிட்டு நிம்மதியாய்த் திரும்பினாள். அடுத்தநாள் காலையில் ஊர் திரும்பிவிட வேண்டுமென்பது அவள் திட்டம்.

மறுநாள் காலையில் எழுந்த சிபாகந்தி குழந்தையின் அழுகைச் சத்தம் கேட்டு அதிர்ந்து வாசலுக்கு ஓடிவந்தாள்....

குழந்தையை வாயில் கவ்வியபடியே நின்ற ஜானி வாலாட்டியது...!

# இரவின் மடியில்

மனக்கடலில் கனவுகளுடன்
உரையாடுகிறாள்
தூக்கத்தை இழந்து
தவிக்கும்
இரவின் விடியலில்
சப்தம் இல்லா
அறையின்
நிசப்தத்தின் இசையில்
மின்னும்
அகல்விளக்கின் ஒளியில்
உடையற்ற மேனியில்
உயிரற்ற தலைமுடியின்
மணத்தை
சுவாசித்தப் படி....

**- கீர்த்தனா**

# Moon inside the Well




நூல் மதிப்புரை : **கவிஞர் ஈழபாரதி**



நூலாசிரியர் காரை இரா.மேகலா

ஹைக்கூ (Haiku) தமிழ் இலக்கியத் தளத்தில் தவிர்க்க முடியாத கவிதை வடிவமாக நாளுக்கு நாள் வளர்ந்துக் கொண்டே வருகின்றது. ஹைக்கூ ஜப்பானிய இலக்கிய வடிவம் என்றாலும், 17 ம் நூற்றாண்டில் பாசோ இதனை மேலும் மெருகூட்டப்பட்ட கலையாக் வடிவமைக்க, இவ்வடிவம் தனித் தன்மையடந்தது. தமிழில் 1980 களில் ஹைக்கூ கவிதைகள் பல எழுதப்பட்டன. அமுதபாரதியின் புள்ளிப்பூக்கள், அறிவு மதியின் புல்லின் நுனியில் பனித்துளி, ஈரோடு தமிழன்பனின் சூரியப் பறவைகள் என்பன குறிப்பிடத் தக்கவை.

இந்திய மொழிகளில் தமிழ் ஹைக்கூ கவிதைகள் பல மொழிபெயர்க்கப்பட்டு வரும் சூழலில், தமிழில் எழுதப்படும் ஹைக்கூவும் ஆங்கிலம் உட்பட பல உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டும் வருகின்றது. தமிழ் இலக்கியம் உலக அரங்கில் தன்னை நிலைபெற்றுக்கொள்ள தமிழ்மொழி தாண்டியும் உலக மொழிகளில் தமிழ் இலக்கியங்கள் வெளிவர வேண்டும். அந்த வகையில் காரை இரா.மேகலா அவர்களின் இந்தத் தொகுப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளது. 36 கவிதைகளை நூலாசிரியரே மொழிப்பெயர்த்திருப்பதுடன் மற்ற கவிதைகளை ஆங்கில மொழியில் கவிஞர் அமரன் அவர்கள் மொழிபெயர்த்து இருப்பதும் கூடுதல் சிறப்பு.

சமூகஅவலங்களைபாடாதகவிதைகளும், கவிஞர்களும் இருக்க முடியாது. மூட நம்பிக்கைக்கு எதிரான இவரின் கவிதை வரிகள் எதிர்வினை யாற்றுகின்றது.

குறுக்கே ஓடியது பூனை
அன்றைய தினம் மோசம்
அடிபட்ட பூனைக்கு

cat crossing path
Unbecomming of the day
For the cat, hurt!

சிறைப்பட்ட கிளி
ஜோதிடத்தில் சிறைவைத்தது
மனித நம்பிக்கை.

Parrot within cage
In astrology imprison'd
Human faith!

சிறு குடிசைகளுக்குள் வாழும் குடும்பங்களின் வறுமைப்பற்றி பேசுகிறது. இக்கவிதை பெருத்தமழை, பெருங்காற்று, இயற்கைச் சீற்றங்களில் இருந்து மனிதர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள பெரும் பாடு படுகின்றனர்.

பெருத்தமழை
குடைக்கு கீழ் குடும்பம்
குடிசை.

Down torrential rain at hut
Under one umbrella
Entire family.

சமகாலத்தில் பெரும் பிரச்னையாக உருவெடுத்துவரும் தண்ணீர், எதிர்காலத்தில் பருக கிடைக்கப் போவதில்லை. அது கானல் நீராகவே இருக்கப் போகிறது என எச்சரிக்கிறார் கவிஞர்.

பாதையெங்கும் தண்ணீர்
அள்ளிப் பருக இல்லை
கானல் நீர்!

Water, water entire path -
None to scoop
Nor to dring... the mirage!

தமிழில் பல ஹைக்கூ கவிதை நூல்கள் வெளிவந்துக் கொண்டிருந்தாலும், தமிழிலும் ஆங்கிலத்திலும் Moon inside the well வெளிவந்து இருப்பது பாராட்டுக்குரியது. நம் தாய்மொழி கடந்து உலக் மொழிகளில் இன்னும் நிறைய தொகுப்புகள் வெளி வர வேண்டும். தமிழையும், தமிழ் இலக்கியத்தையும் சிறு இடத்துக்குள் அடைத்துவிட முடியாது என்பதற்கு இவரின் கவிதைகளும் முழு சான்று.

வெளியீடு :

Ragam Pathippagam
Karaikal 609 601 (india)
megalaoct2000@gmail.com

விலை : ₹ 100/-

## ஹைக்கூ

யாருமற்ற தெருவில்
அனாதையாக நிற்கிறது
வசந்தத்தை வரவேற்கும் மரம்.

**- அனு ராஜ்.**

கல்லான கடவுள்
முதன் முதலாகப் பார்க்கிறார்
சிற்பியை.

- ஸ். டென்னிஸ்

புல்லாங்குழலை
கை படாமல் வாசிக்கிறார்
புதிதாய் பார்வை பெற்றவர்.

- பட்டுக்கோட்டை P. மூர்த்தி

இறக்கைகளை விரித்து
நடந்து செல்கிறது
கிளையின் மேல் பறவை.

- அஜித் குமார்

செல்லரித்த புத்தகத்தை
எத்தனை காலம்
படித்திருக்குமோ கரையான்கள்.

- செந்தில் பாபு

இலைகள் உதிர்ந்த மரத்தில்
இன்னும் மிச்சமிருக்கிறது
யாரோ விட்ட காற்றாடி.

- உறையூர் மகேஷ்

விற்பனை குறைவு
கனத்தோடு சுமந்து திரும்புகிறார்
பஞ்சு மிட்டாய்க்காரர்.

- அன்பழகன் G.

பனை மரத்தின் கீழ்
நாயை நகர்த்துகிறது
இடம் பெயரும் சூரியன்.

- தர்மா சிங்

நேர்க்காணல் :

## முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி யுடன்
## மேகலாசெழியன்

தமிழ்நெஞ்சம் இணையாசிரியர் முனைவர். பெண்ணியம் செல்வக்குமாரிக்கு மிகச் சமீபத்தில் "ஆச்சார்யா சக்திவிருது", "திருப்பூர் சக்தி விருது" என இருவிருதுகள் அளிக்கப்பட்டது. புதுச்சேரி மாநிலத்தில் உள்ள ஆச்சார்யா நிறுவனம், திருப்பூர் கலை இலக்கியப் பெருமன்றம் ஆகிய அமைப்புகள் இவ்விருதுகளை வழங்கிப் பெருமைபடுத்தியது. அவ்விருது மங்கை செல்வக்குமாரி அவர்களின் நேர்க்காணல் இதோ...

# பெண்ணின் பெருந்தகையும் மண்ணின் விருதுகளும்



- இந்த ஆண்டில் இரு சக்தி விருதுகளை வாங்கியிருப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.. இவ்விருதுகள் குறிப்பாக பெண்களுக்கு அளிக்கப்படும் விருதுகள்.. இவ்விருது களைப்பெறும்பொழுதுஎன்னமாதிரியான மனநிலையை உணர்ந்தீர்கள்..

உண்மையில் சொல்லப்போனால், நான் எவற்றையும் பெரிதாகக் கருதுபவள் கிடையாது. இவை போன்ற பல விருதுகளை நான் எப்போதோ வாங்கியிருக்க வேண்டும். காலச்சூழலும், வாழ்க்கைச் சூழலும் காலம் தாழ்த்தியே இவ்விருதை வாங்க வைத்திருக்கிறது என்று எண்ணுகிறேன். மேலும் இவ்விருதுகள் வலிய வந்து என்னை முன்தூக்கிவிடுவதாக உணர்கிறேன். ஆம்.... இனி நான் இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் ஓடயோடி செய்ய வேண்டிய அவசியத்தை ஏற்படுத்திவிட்டதற்காக இவ்விருதுகளுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

● உங்கள் கடந்த காலம் பற்றிய நினைவு களையும் பணிகளையும் அறிமுகம் செய்யுங்களேன்..

நான் தமிழகத்தில் பிறந்து புதுச்சேரியில் வாழ்க்கைப்பட்டவள்.நான்ஆசிரியப்பணியில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து பணியாற்றி வருகிறேன். அதோடு இலக்கியப்பணியும் சமூகப்பணியும் என் இரு கண்கள் எனலாம். அந்த அளவிற்கு அவற்றோடு ஈடுபாடும் நெருங்கிய தொடர்பும் கொண்டவள்.

கடலூரில் உள்ள சோனங்குப்பம் என்ற சிற்றூரில் சாதாரண நடுத்தர மீனவக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள். என் ஊரிலேயே முதன்முதலாக கல்லூரியில் படித்தவள் நான்தான். இளங்கலை தமிழ் படித்துபின் புதுவைப் பல்கலையில் முதுகலை படித்தேன். எனது கல்லூரி காலத்திலேயே படிக்காத முதியவர்களுக்குப் படிக்கக் கற்றுக்கொடுப்பேன். அன்றைக்கே ஊரில் மரங்களை நட்டுவளர்ப்பதிலே ஆர்வங் கொண்டிருந்தேன். மரங்களே நம்மைக் காக்கும் தெய்வங்கள் என்பதை அறிந்திருந்தேன். ஆம்.. இயற்கையின் மீது ஆறாக் காதலும் மாறாப் பற்றும்உடையவளாகஇருந்தேன்.தற்பொழுது நான் வசிக்கின்ற சோலை நகரில் முந்நூறு மரங்கள் நட்டு வளர்த்தவள். சுனாமிக்குப் பிறகு அந்த மரங்கள் பல கருகி காய்ந்துவிட்டன. பலபேர் வெட்டிப்போட்டனர். இருந்தும் பத்துப் பதினைந்து மரங்கள் இன்னும் என் பேரைச் சொல்லும்.இப்பொழுதும்மாணவர்களிடத்தும், பார்க்கின்றவர்களிடத்தும் மரங்களின் அவசி யம் பற்றிச் சொல்லிக் கொண்டே இருப்பேன். மரங்கள்தாம் உண்மையில் நம் உயிர் காக்கும் தெய்வங்கள்.

● உங்களுக்கு வேறு எவற்றிலெல்லாம் ஈடுபாடு உண்டு. அது குறித்துச் சொல்லுங்கள்.


பொதுசேவையில் ஆதீத ஆர்வமும் ஈடு பாடும் கொண்டவள். குழந்தைகள் மீது மிகுந்த ஈடுபாடு என்பதால், ஆசிரியப்பணி செய்து திரும்பும் மாலை வேளைகளில் குழந்தைகளை அழைத்து வட்டமாக உட்கார்ந்துகொண்டு கதைகளைச் சொல்லி

ஆச்சார்யா கல்வி நிறுவனம் நிறுவனர் அரவிந்தன் மற்றும் பேராசிரியைகள்



மகிழ்விப்பேன். குழந்தைகள் அன்போடு "ஆன்டி" என்று அழைப்பர். நான் ராசாராணி கதையிலிருந்து தற்கால கதைகள் வரை சொல்வேன். குழந்தைகளையும் சொல்ல வைப்பேன். நான் நல்ல கதைச்சொல்லி என்பதால் புதிதாகத் தோன்றும் மாயாசாலக் கதைகளை நானாகவே உடனே உருவாக்கிச் சொல்வேன். சில பொழுதுகளில் சொதப்பலாகி, குழந்தைகள் சிரிப்பர். குழந்தைகளோடு அளவளாவி, விளையாடுவதில் அலாதிப் பிரியம் எனக்குள். முன்னாள் பிரதமர் விபிசிங் அவர்களிடம் உங்களுக்குப் பிடித்தமான பொழுதுபோக்கு எது என்று கேட்டபொழுது ''எனக்கு என் பேரப்பிள்ளைகளுடன் விளையாடுவதுதான்'' என்றாராம். அது போல் குழந்தைகளிடம் குழந்தையாக மாறி விளையாடுவதில் ஒரு பேரின்பம் கிடைப்பதை உணர்ந்திருக்கிறேன். ஒரு முறை குழந்தைகளோடு குழந்தையாக கிரிக்கெட் பார்த்துக்கொண்டு இருந்தேன். அப்பஒருஎல்கேஜிபடிக்கறதினேசைசீண்டிப் பார்க்க வேண்டி இந்தியா தோற்றுவிடும் என விளையாட்டாகச் சொன்னேன். அது கடைசி விக்கெட் நேரம். சொன்னபடியே இந்தியா தோற்றது. அவன் மிகக் கோபமாக எழுந்து "ஆன்டி உங்களாலதான் இந்தியா தோத்துப்போச்சு. உங்கப் பேச்சு கா" என்று சொல்லிவிட்டு கோபமாகச் சென்றதை இன்று நினைத்தாலும் வியப்பாக இருக்கும். குழந்தைகள்தாம் எத்தனை உண்மையானவர்களாக இருக்கிறார்கள்.

**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி யுடன் நேர்காணல் செய்த மேகலாசெழியன்**



நாம் தாம் அவர்களைப் பொய் சொல்ல வைக்கிறோம். தீயப் பழக்கத்திற்கு ஆளாக்குகிறோம் என்பதை உணர்ந்த தருணம் அது.

- நீங்கள் இதுவரை எத்தனை புத்தகங்கள் வெளியிட்டு இருக்கிறீர்கள்.. இது குறித்துச் சொல்லுங்களேன்.

என் முனைவர் பட்ட ஆய்வு நூல் «திருநங்கையர் வாழ்நிலையும் பால்நிலையும்» என்பதாகும். ஏழாண்டுகள் களப்பணி செய்து எழுதப் பட்ட ஆய்வுநூல் இது. இந்நூலை பிரான்ஸ் தமிழ்நெஞ்சம் பதிப்பகம் வெளியிட்டு சிறப்பித்தது. இந்நூல் வெளிவந்த சில மாதங்களிலேயே விற்றுத் தீர்ந்தது. இந்நூலின் இரண்டாம் பதிப்பு புதிய இணைப்புகளுடன் விரைவில் வெளியாகவுள்ளது.

நியூசெஞ்சுரி பதிப்பகத்தின் மூலம் வெளியிடப்பட்ட முதல் கவிதைநூல் «பெண்ணியம் பேசுகிறேன்», புதுச்சேரி கலைப் பண்பாட்டு துறையின் நிதியுதவி யுடன் வெளிவந்த இரண்டாவது நூல் ''ஈர்ப்பு''. பாட்டுக்கவி பாரதியின்மேல் காதல் கொண்டு எழுதிய கவிதைநூல் ''அகத்தீ,'' அடுத்ததாக இலங்கையில் சிறந்த கவிதை நூலுக்கான விருது கிடைத்த நூல் «கரைந்தழும் கடல்» என்பதாகும். தற்பொழுது "காமத்துப்பாலும் ஹைக்கூவும்" நூல்எழுதி முடித்திருக்கிறேன். அதோடு "வம்பாமணல்" என்ற பெண் பற்றிய நாவல் எழுதிக் கொண்டிருக்கிறேன்.»

மேலும் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளேன். நாட்டுப்புறவியல் ஒப் பாரிப்பாடல்கள் பற்றி எழுதியுள்ளேன். "சிங்காரவேலரும் பெரியாரும்", "அறிவுமதியும் அவர்தம் படைப்புகளும்", குறிப்பிடத்தகுந்த கட்டுரைகளாகும். "பழந்தமிழ் இலக்கியத்தில் பெண் புனைவுகள்'' என்ற கட்டுரை உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வு கட்டுரையாகத் தொகுக்கப்பட்டுள்ளது. அடுத்து «திருநங்கையர் வாழ்நிலையும் பால்நிலையும், «தமிழ்ப் புனைவுகளில் திருநங்கையர்» என்றகட்டுரைகள்தற்பொழுது



பேராசிரியர் இரா.தமிழரசி, அம்பிகா குமரன், பெண்ணியம் செல்வகுமாரி, காரை இரா. மேகலா மற்றும் ஸ்ரீகிருஷ்ண திலகா.

மானுடம் போன்ற ஆய்வு இதழ்களில் வெளிவந்துள்ளன. தினமலரில் இன்னொரு தாய்வீடாக வேண்டும் பள்ளிக்கூடங்கள் எனும் தலைப்பில் வெளிவந்தது.

- தமிழ்நெஞ்சம் இதழில் இணையாசிரியர் நீங்கள்.. அவ்விதழ் குறித்துச் சொல்லுங்கள்.

முதலில் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுக்கு என் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்தான் இந்த அரிய வாய்ப்பினை நல்கினார். அவரால் உலகம் முழுக்க இருக்கின்ற தமிழ் எழுத்தாளர்களுக்கு அறிமுகமானேன். பிரான்சிலிருந்து வெளிவரும் தமிழ்நெஞ்சம் இதழின் இணையாசிரியர். உலகின் பலநாடுகளிலிருந்தும் தமிழ்க்கவிஞர்கள், சிறுகதையாசிரியர்கள் எனத்தமிழ்நெஞ்சத்தில் எழுதிவருகின்றனர். இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை அவருடன் சேர்ந்து பதிப்பித்திருக்கின்றேன்.. நிறைய எழுத்தாளர்கள் புத்தகம் போட வாய்ப்பில்லாச் சூழலில் அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு குறைந்த செலவில் பதிப்பித்திருக்கின்றேன். இலக்கியவாதிகள் பலர் இதுகுறித்துப் பாராட்டு வது எனக்கு உத்வேகம் அளிக்கிறது என்றால் மிகையில்லை.

- உங்களுடைய வேறுபட்ட பணிகள் ஏதாகிலும் உண்டெனில் அது குறித்தும் கூறுங்களேன்.

புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆய்வு மையத்தில் «சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர் அறக்கட்டளை» யை உருவாக்கிய பொறுப்பாளர்களில் நானும் ஒருவர். கவிஞர் அறிவுமதி,கவிஞர் முத்துநிலவன்,பேராசிரியர் இளங்கோ, புலவர்.பா.வீரமணி போன்ற சிறந்த ஆளுமைகள் அவ்வறக்கட்டளையில் சிறப்புரையாற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலக்கியப்பணி மற்றும் சமூகப் பணிக்காக பல விருதுகளைப் பெற்றுள்ளேன். ''சிங்காரவேலர் சுடர் விருது'', ''சாதனைத்திலகம் விருது'' எனப் பல களப்போராளி, சமூகச் செயற்பாட்டாளர் என்பதால் "காமராசர் நினைவு விருது" பெற்றுள்ளேன்.

பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வருபவள். «மகிழ்ச்சி பெண்கள் நலப்பேரவை», "மீனவப் பெண்கள் முன்னேற்ற அமைப்பு", ''நீலக்கடல் மகளிர் சங்கம்'' போன்ற பெண்களுக்காக சங்கங்கள் இவைகள்வழி செயலாற்றி வருகிறேன்.



புதுவைத் தமிழ்ச் சங்கத்தின் பொன்விழாவில் மதிப்புமிகு மன்னர் மன்னன், கி.ரா போன்றோருடன் ''சான்றோர் பாராட்டு'' பெற்றிருக்கிறேன் என்பதில் புளங்காகிதமடைகிறேன்.முனிசிபல் கவுன்சிலராக சுயேச்சையாக (ஓட்டுக்குப் பணம் தராமல்) நின்று தோற்ற அனுபவமும் உண்டு. "செயல் அதுவே சிறந்த சொல்" என்பதற்கேற்ப என் எளிய வாழ்வை நடத்திக் கொண்டிருக்கிறேன் என்பதைத் தவிர வேறென்ன சொல்ல முடியும்? இறுதியாக.. என்னைப் பற்றி நீங்கள் இரத்தினச் சுருக்கமாக அறிந்து கொள்ள என் ஒரு கவிதையே போதுமானது என்று நினைக்கிறேன்.

என் கவிதையின் சிலவரிகள்தான் இவை..

''என்னை பெமினிஸ்டு
என்னை கம்யூனிஸ்ட்
என்னை பெரியாரிஸ்ட்
என்றழைப்பதை விட
ஹிமனிஸ்ட் என்றழைப்பதையே
பெருமிதமாகக் கொள்வேன்.''

## அகவைநாள் வாழ்த்துகள்!

நெய்தல் நிலத்தின் ஆணிவேராய்
நித்தம் உழைக்கும் கவிமகள்
பொய்கள் பேசத்தெரியாத
உண்மை விளம்பி உயர்ந்த மகள்
உப்புக்காற்றை போலவே
உடனே பற்றும் தோழமை
சப்புக்கொட்டி வாழாமல்
சமரை விரும்பும் வீரமகள்
செப்பும்கவியில் பெண்ணியத்தை
சேர்த்துக் குழைத்து படைத்திடுவார்
ஒப்புக்காக அல்லாமல்
உயிராய் பழகும் நேசமகள்
நண்டாய் நட்பை பிடித்திடுவார்
நாளொரு மேனி வளர்த்திடுவார்
செண்டாய் மணக்கும் அவரன்பு
செந்தமிழ் செழிக்கும் பேரன்பு
தொண்டு செய்ய துடித்திடுவார்
மொண்டு பாசம் ஊற்றிடுவார்
என்றும் வாழ்க செல்வா நீ
ஏற்றம் பெற்று வாழியவே !

**மு. பாலசுப்ரமணியம், புதுச்சேரி**



# பிறமொழியைக் கலவாதே தம்பி

பிறமொழியைக் கலவாதே தம்பி தம்பி
பிழைபட்டுத் தமிழ்தவிக்கும் வெம்பி வெம்பி
கறைபட்டால் தமிழ்மொழிக்கே கலங்க மென்றும்
கண்கலங்க விடலாமா நம்தாய் தன்னை
நறைகொண்ட தமிழுக்குள் நாமே நஞ்சை
நன்கிட்டு நலம்கெடுக்க லாமாத் தம்பி
கறந்தூட்டும் பாலுடனே தாய்தான் தந்தக்
கனித்தமிழைக் காத்திடுதல் கடமை தம்பி

பிறைமதியைப் போல்விளங்கும் பெருமை கொண்டப்
பெருவனமாம் தமிழ்ப்புனலோ தரணி யெங்கும்
குறைவின்றி யோடுமாறே குமரி தன்னில்
குதித்தெழுந்தி மயம்போலும் வளர்ச்சி யுற்று
நிறைகுடமாய் நின்றிலங்கும் நிலையி லின்று
நிலையாடி போலுடையும் நிலைதான் வந்தால்
சிறைபோவோம் செந்தமிழிற் சேறு கண்டால்
சிறுதுளியம் பிறமொழிக் கலவாது செய்வோம்

வடமொழிகள் தமிழுக்குள் வாரா வண்ணம்
வகைசெய்து தூயமொழி வளரச் செய்வோம்
தடம்பதித்த தாய்மொழியின் தரம்கு றைந்தால்
தானைகொண்டு தக்கதொரு வழிதான் காண்போம்
விடம்கலவா விதமெங்கள் தமிழ்த்த ரத்தை
வீழ்ந்திடாது காத்திடவே யொன்று சேர்வோம்
புடம்போட்ட தங்கம்போல் புதுமை கண்டு
பிறமொழிதான் புகுந்திடாது பொன்னாய் மின்ன

எண்சீர் விருத்தம் - (காய் -காய் - மா - தேமா)

**வில்லூர் பாரதி**

# கவிஞர் ஈழபாரதி

## கவிதை நூல்கள் அறிமுக வெளியீடு!

## தமிழ்நெஞ்சம்







21/07/2019 ஞாயிறு பிற்பகல் 4 மணியளவில் பிரான்ஸ் பாரிஸ் நகரில் வெகுசிறப்பாக நடைபெற்றது ஈழபாரதியின் கவிதை நூல்கள் அறிமுக விழா. மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. வரவேற்பு நடனத்தை பிரைன் கலை நதி நாட்டியாலையா மாணவர்கள் வழங்கினர்.

அதனைத்தொடர்ந்து மேரிடிலக்சி ரெஜிவாசிங்டன் அவர்களின் வரவேற்புரை இடம்பெற்றது. இந்நிகழ்ச்சிக்கு பிரான்ஸ் கம்பன் கழக நிறுவனர் பாட்டரசர்கி. பாரதிதாசன் தலைமையேற்று உரைநிகழ்த்தினார்.

ஈழபாரதியின் மீள்பதிப்பான "சருகுகள் " கவிதை நூல் தமிழ்நெஞ்சம் பதிப்பாக வெளியீடாகும், நூலினை தமிழ்நெஞ்சம் அமின் வெளியிட பாட்டரசர் கி.பாரதிதாசன் பெற்றுக்கொண்டார். வைஷ்ணவி



பிராஷ்ந், அபிராமி ஆனந்தரூபன் அவர்களின் நடனங்கள் விழாவுக்கு மேலும் சிறப்பு சேர்த்தன. பிரான்ஸ் பாரிஸ் “பாலம்” படைப்பகத்தின் ஒருங்கமைப்பாளர் ஜஸ்ரின் தம்பிராஜா











அவர்கள் வாழ்த்துரையோடு நிகழ்ச்சியையும் தொகுத்து வழங்கினார். அனுசுயா ஆனந்தரூபன் மற்றும் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களின் வாழ்த்துச் சொற்பொழிவும் இடம்பெற்றன, நூல்குறித்து பாஸ்கரலிங்கம் பார்தீபன் அவர்கள் உரையாற்றினார். பிரைன் கலை நதி நாட்டியாலையாவின் பரத ஆசிரியர் ரோஸ்லின் டயஸ் அவர்களின் நடன பள்ளி மாணவர்களின் நடனங்கள் விழாவிற்கு சிறப்புசேர்த்தது, எழுத்தாளரான அருட்தந்தை சூ.மா செயசீலன் அவர்களின் ஒளித்திரை ஊடான ஆசியுரையும் அரங்கேறியது. கவிஞர் ஈழபாரதியின் ஏற்புரையோடும், டிலானி நிக்சன் அவர்களின் நன்றி உரையோடும் நிகழ்ச்சி நிறைவானது.

நிகழ்சிக்கான ஊடக அனுசரணையை பனாசியா தொலைக்காட்சி வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.







## அடுக்குமல்லி தொடுத்து வச்சேன்



ஆசையா நேசமா அன்பை நெறச்சு
ஆனந்தமா ஒங்களுக்கா பூவு பறிச்சு
அடுக்கு மல்லி தொடுத்து வச்சேன்
இடுக்கிலே எங்கே ஒளியுறீங்க மாமா!

வடக்கிலே புசல் (புயல்)காத்தாம் மாமா
வாங்க வேலைக்குப் போக வேணாம்.
படுக்கைக்குப் போகும் வரை என்னோடிருங்க
பருப்புக்கறி சோறு பொங்கித் தாரேன்மாமா.

தொடுத்து வெச்ச மாலையைச் சூட்டிவிடுங்க
தொகை தொகையாப் பேசிக் கொண்டாடுவோம்.
தோப்புக்குப் போயி இளநீ குடிப்போம்.
தோடை மரமும் காய்ச்சுக் குலுங்கியிருக்கு.

ஆவணிக்குத் தானே கண்ணாலம் மாமா
அதுவரை பேசிக் கலந்தி ருப்போமே
அப்பாரும் ஏதுஞ் சொல்லார் வந்திடுங்க
ஆத்தாவுக்கு நானு சொல்லிக்கிறேன் மாமா

வராட்டா நானு வதங்கிடுவேன் மாமா
வரும்போது மறக்காம முறுக்கோடு வாங்க
வாசக் கதவோரம் வச்ச கண்ணுமாறாம
வாரப்பாடாய் பாத்திருப்பேன் என்னாசை மாமாவே

**- பா வானதி வேதா. இலங்காதிலகம்**
டென்மார்க்



## கண்ணியம் தேடும் பெண்ணியம்

முட்டிமுட்டி மெல்ல முளைக்கும் முகப்பருக்கள்
வெட்டிப்பேச்சில் மெல்ல
நோகும் உணர்வலைகள்...

பதின்ம வயதென்றாலே பதறவைக்கும் பேருலகில்
மதிநோக்கி உயரெழுதல் பெண்ணினச் சாபமா...?

சீரற்ற சீருடையில் செந்நீரின் கசிவு
சீற்றத்தின் வேதனையில்
கண்ணீர் மட்டும் கடனாய்...

ஓடித்திரிந்த வெண்புறா இனி ஓரிடத்தில் துயிலும்
கூடிவந்து பெண்களெல்லாம்
தனி காரியங்களை பயிற்றும்...

ஏனிந்த பிறவியென கூனிக் குறுகவைக்கும்
தானியக் கிடங்குகளா தாவணிப் பெண்கள்...?

**- கௌதமன் நீல்ராஜ்**

பல்சுவை
தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
ஆகஸ்ட் 2019

# தமிழ்த்தாயே நீ வாழ்க!

கடல் நீரும் ஆவியாகி மாரியாகப் பொழியும் உண்மை
ஆயிரமாண்டு முன்பே கூறிய ஆண்டாளும்

இரண்டடி குறள் கொண்டு ஏழுலகம் தனை ஆண்டு
வான்புகழ் தன்னில் கொண்ட வள்ளுவப் பெருந்தகையும்

ஆத்திச்சூடி பாடி நின்று அதியமானைத் தேடிச் சென்று
நட்பின் புகழ் ஓதிநின்ற ஒப்பில்லா ஔவையாரும்

வடக்கில் வால்மீகியை விஞ்சி நிற்கும் காப்பியத்தை
தெற்கில் நமக்குத் தந்த கவிக்கோமான் கம்பனும்

சிங்கார மதுரைதனை சிலம்புத் தீ கொண்டதனை
சிலப்பதிகார முத்தாய் சிந்திட்ட இளங்கோவும்

அப்பர் சுந்தரரும் அருணகிரி நாதர் மற்றும்
பெரும்புராண சேக்கிழாரும் பெருங்கவி ஒட்டக்கூத்தரும்

தேசியக்கவி யென்னும் மீசை கொண்ட பாரதியும்
பாரதி தடம்சென்ற கனக சுப்பு ரத்தினமும்

உன் மடி தவழ்ந்து வந்த உன் குலப் பிள்ளை தாமே
உன் புகழ் பாடி நின்ற உயர் குலமக்கள் தாமே

முத்தமிழ் நூல்கள் எல்லாம் முக்கனியின் சர்க்கரையாம்
மூத்த தமிழன்னை நீயோ மூவுலகை அளந்தவளாம்

ஆழிப் பெருங்கடலே தரணி படர்ந்திருக்கும்
உன்னுள் மூழ்கி முத்தெடுக்க என்னுள் திறமையில்லை

உந்தன் அலைக்கரத்தால் என்றும் ஆசிபெற்று
பின்னர் கரையொதுங்கும் மீச்சிறு மண்துகள் நான்

அன்னை உனைப் புகழும் அருகதை எனக்கில்லை
எனினும் என் கவிதை உன் பாதம் தழுவட்டும்

பேராசிரியர் கவிஞர் **முனைவர் ரத்னமாலா புரூஸ்,**
நாகர்கோயில்